# மஹாமௌனம் !!!





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# மஹாமௌனம் !!!

## பொருளடக்கம்


1. ஸ்ரீசத்குரு ராமானந்தர் ஸ்ரீசத்சீடன் கபீர் விளக்கம்.----------------------1
2. ஸ்ரீஜெயதேவரும் கிரௌஞ்சகிரி அரசனும் நடத்திய உரையாடல்.-----15
3. ஓர் ஞானியின் பிறவி ரகஸ்யம்.----------------------------------------27
4. சாட்சி நிலை.-----------------------------------------------------------41
5. ஜீவன் முக்தி நிலை.----------------------------------------------------42
6. ஸ்ரீ சத்குருதேவரின் லட்சணம்.-----------------------------------------44
7. மாயையின் நிழலே மனம்.---------------------------------------------52
8. பிரம்மா மற்றும் சிவனின் நடிப்பு------------------------------------------54
9. வாமன, ராம, கிருஷ்ணாவதார விளக்கம்.--------------------------------59


எல்லாம் நீ!



ஓம்

அன்பின் வடிவான எம் தவக்குழந்தைகளே!
அடங்கி இருப்பதனால் ஆத்ம சுகம் பெறுவீர்களாக!
வாக்கு மௌனமானால் மனோ நவம் பெறுவீர்களாக!
உறவை மறந்தீர்களானால் உண்மையை அடைவீர்களாக!
குணங்களை விட்டால் பரிபூரணத்வம் பெறுவீர்களாக!
சத்வகுணம் பெருகினால் தெய்வநிலை பெறுவீர்களாக!
நிர்குணமானால் அகண்டாகார விருத்தி பெறுவீர்களாக!
அனைத்தும் நீங்களானால் அகண்டானந்தம் பெறுவீர்களாக!
நீங்களே அதுவானால் பிரம்மானந்த சமுத்திரமாவீர்களாக!

"அதுவும் இல்லை, இதுவும் இல்லை, எதுவும் இல்லை"

(இல்லையென்பதே இல்லை ஆனால் ஒன்றுண்டு)

**அது மஹாமௌனம் !!!**

(அது மஹாரஹஸ்யம்!)



## ௨

## சத்குரு ராமானந்தர் சத்சீடன் கபீர் விளக்கம்!

குழந்தைகளே! கபீர் அயோனி சம்பந்தர். அவர் சுகப்பிரம்மம் அம்சம். வளர்ப்புத் தந்தையோ முஹம்மதிய குலத்தின் நூமால் என்னும் நாமம் தரித்தவர். வளர்ப்புத் தாயோ ஜீஜாபீவி என்னும் முஹம்மதிய மாது ஆவாள். இவர்கள் குலத் தொழிலோ பட்டுத்தறி நெசவு ஆகும். இந்த கபீருக்கு ஸ்ரீ பகவானே ஓர் பிராமணோத்தமராக வந்து சகுணத்தியானத்தை வலுப்படுத்தி "ஜெய சீதாராம்" என சொல்லிப் போனார்!

பின் கபீர் ஓர் சத்குருவை தேடினார். சிலகாலத்தில் இவர் மனோபக்குவ நிலை அறிந்து ஸ்ரீ ராமானந்தர் என்னும் சத்குருவை காட்டினார் ஸ்ரீ பகவான்.

இங்கு சிஷ்யனின் மனோநிலை!

இங்கு நம்பிக்கையே சத்குரு பக்தி!
இங்கு நம்பிக்கையே தெய்வ பக்தி!

இங்கு நம்பிக்கையின் வைராக்யமே பரமாத்ம நிலை!

ஓர் உதாரணம்!

சிவாஜி தம் குருதேவராகிய சமர்த்த ராமதாஸரை சந்திக்கிறான். ஓர் நூறு பேருக்கு குறையாமல் குதிரைகள் சைனியங்கள் அவனுடன் வந்திருக்கின்றன. சிவாஜி மட்டும் தனியாக வந்து குருதேவரை நமஸ்கரித்து விட்டு அரண்மனை செல்ல விடைகேட்கிறான். குருதேவரோ போஜனம் பண்ணிவிட்டு செல்லவாமே என்றார். நூறு குதிரைகளும் நூறு வீரர்களும் வந்திருக்கிறோம் நான் தனியாக சாப்பிட இயலாது என்றான் அரசன். எல்லோரும் சாப்பிடவாமே என்றார் குருதேவர். அரசனும் சரியெனச் சம்மதித்தான். ஆனால் ஸ்ரீ குருதேவரோ ஒரு படிமாவு அளந்து கொடுத்தார்.

இங்கு சிஷ்யன் இந்த ஒருபடி மாவு எப்படி ௨௦௨ பேர் பசிக்கு ஏற்றதாகும்? "என சந்தேகிக்கவில்லை!



உ

ஸ்ரீ சத்குரு தேவரின் சரணாரவிந்தங்களில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தான்! நம்பிக்கை கொண்டான்.

குழந்தைகளே!

இதுஎப்படி முடியும், எப்படி நடக்கும் என அணுப்பிரமாணம் மனோ அசைவு இருந்தாலும் அவஸ்யம் அது நடக்காது, அது முடியாது!!

இந்த உத்தம சிஷ்யன் சுவாமியின் அசைக்கமுடியாத நம்பிக்கையினால் அந்த 202 ஜீவர்களும் பசியாறினார்கள்.

இது கதையல்ல உண்மை கருத்து!

ஓர் சமயம் ஓர் அரசன் தம் பரிவாரங்கள் குதிரைகள் சேனைகளுடன் வேட்டைக்கு சென்றான். திரும்பி வரும் சமயம் சூரிய அஸ்தமமாகி இருட்டி விட்டது. வழியில் ஓர் காட்டாறு குறுக்கிடுகிறது. வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. தெய்வாதீனமாக அந்த வனத்தில் தம் குருதேவரை தரிசிக்கிறான். அவர் மலரடிகளில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விட்டு காட்டாற்றை தாண்ட உபாயம் கேட்கிறான். ஸ்ரீ குருதேவரும் சிரித்துக்கொண்டே அங்கு தெய்வாதீனமாக கிடந்த ஓர் காகிதத்தை எடுத்தார் அதை மடித்து ஓர் கப்பலினை செய்தார் அதை அந்த அரசன் கைகளில் கொடுத்து

"குழந்தாய்! இந்த கப்பலில் பயணம் செய்து கரை ஏறுவீர்களாக என பணித்தார்."

அந்த அரசனாகிய சிஷ்யன் திகைக்கவில்லை, சந்தேகிக்கவில்லை தயக்கம் பயம் இல்லை!

அன்போடு கண்களில் கண்ணீர்மல்க இருகரங்களாலும் பவ்யமாக வாங்கினான். அங்கு சந்தேகம் பயம் இல்லாமல் நம்பிக்கையின் வைராக்யமாக அந்த காகித கப்பலை ஜலத்தில் வைத்தான். கண்ணை மூடி கொட்ட "ஜெய் குருதேவா" என ஸ்மரித்த வண்ணம் கப்பலில் ஏறினான் மற்றும் குதிரை பரிவாரங்களுடன் அந்த காகித படகில் ஏறி மறு கரையேறினார்கள்.

இது கதையல்ல உண்மை கருத்து!



உ

இந்த இரண்டு கதையிலும் நீ உணர்வது!

1. மஹான்களின் நடை, உடை, பாவனைகளை உன் கற்பனைக்கேற்ப சந்தேகியாதே!
2. உன் நம்பிக்கையே உனக்கு பலன்!
3. ஓர் சிறு கேள்வியின் அசைவு தோன்றினாலும் அது பலிதமாகாது.

உயர்வாக கருதும் மனம் தாழாது!
தாழ்வாக கருதும் மனம் உயராது!!
சலன முற்றால் சஞ்சலம் உண்டு!
சலன மற்றால் ஆனந்தம் உண்டு!!

குழந்தைகளே!

சலனத்தினால் வரும் சஞ்சலம் உன்னைத்தான் கெடுக்குமே தவிர பிறரை அது கெடுக்காது. நம் கபீரும் சஞ்சலமில்லா மனதுடனும் தீர்க்கமான முடிவுடனும் ஸ்ரீ ராமானந்தஸ்வாமிகளை

"தம் சத்குருவென ஏற்றுக் கொண்டார்."

இங்கு ஒன்றை உணர வேண்டும்!

1. குருதேவரோ பிராமண குலம், கபீரோ மிலேச்சன் குலம்!
2. பிராமண குலமோ பசுவை போற்றுவது, மிலேச்ச குலமோ பசு வதை செய்வது!
3. பிராமண குலமோ வேதம் ஓதுவது. மிலேச்ச குலமோ குரான் ஓதுவது!

இப்படி இன்னமும் அனேக கருத்துக்களை சொல்லிக் கொண்டே போகலாம். இதில் இன்னொரு முக்கியத்தையும் கொள்ள வேண்டும்!

1. ஸ்ரீ குருதேவர் கபீரை கண்ணால் கூட காணவில்லை; பேசவில்லை, ஓர் முடிவெடுக்கவும் இல்லை!
2. ஆனால் உத்தம சிஷ்யனாகிய கபீர் ஸ்ரீ குருதேவரை காசி கங்கை கரையில் பார்த்திருக்கிறார். அவரைப் பார்த்த மறு கணமே இவரே நம் ஸத்குருவென முடிவெடுத்து விட்டார்!

இங்கு நம் சாஸ்திர சம்பிரதாயம்!

சிஷ்யனே குருவை தேடிச் செல்ல வேண்டும். குரு சிஷ்யனின் குல, குடும்ப, கோத்திரங்களை கேட்டு தமக்கு திருப்தி ஏற்பட்டால் ஏற்றுக்கொள்வார்.

ஓர் உத்தம சிஷ்யனை குருவே தேடிச் செல்வதும் உண்டு!

இது அதிரகஸ்யம்.



உ

## இங்கு இன்னொன்றையும் உணர வேண்டும்

மாதா, பிதா, குரு, தெய்வம் இது சாஸ்திர சம்பிரதாயம்!
ஆனால் நம் கபீரோ ஸ்ரீ மாதா பிதா தத்துவம் தம் முடிவை மாற்றவில்லை.
கபீருடைய தாய் தந்தை சொல்கிறார்கள் அடா கபீர்! நம் குலம்
வேறு, அவர் குலம் வேறு. நாம் குரான் ஓதுகிறோம், அவர் வேதம் ஓதுபவர்
அவர் இந்து; நாம் முஹம்மதியர்; அவர்கள் பசுவை தெய்வமாக போற்றுகிறார்கள்
நாம் பசுவதை செய்து உணவாக உண்கிறோம் இப்படி பலகாரணங்களைக்
காட்டி செல்ல வேண்டாம் என தடுக்கிறார்கள்.

இங்கு மாதா பிதா வாக்கை கடந்தே செல்கிறார்!

இதிலிருந்து என்ன தெரிந்து கொள்கிறோம் என்றால்??

"ஸத்யத்தை நோக்கிப் போகப்பட்டவனுக்கு
குல குடும்ப கோத்திர சம்பிரதாயம் தடை செய்யாது"!!!

"இங்கு இந்த சாதகனுக்கு தம் சாதனையில்
உறுதியான நம்பிக்கை வேண்டும்"!!!

"இவன் நம்பிக்கையே துணைவன்
இவன் வைராக்யமே ஆயுதம்"!!!

ஒன்றை கவனிக்க வேண்டும்

உலக தர்மமும், தெய்வீக தர்மமும் இங்கு மோதுகின்றன!

எப்படி என்றால்

இங்கு குருதேவரும் அவர் சிஷ்யர்களும் இவரை ஏற்க மறுக்கின்றனர்.
கபீர் ஒர் மூன்று முறை திரும்ப திரும்ப ஸ்ரீ ராமானந்தர் ஆஸ்ரமம்
செல்கின்றார். ஒவ்வொரு முறையும் குருதேவரின் சீடர்களால் அடித்து
துன்புறுத்தப்படுகிறார். மூன்றாவது முறை கபீர் போகும் போது அவரை
உதிரம் அறப்பட அடித்து ஒர் தூணில் பிணைத்து விடுகின்றனர்.
இதில் விந்தை என்னவென்றால் ஸ்ரீ பகவானே வந்து கபீர் கட்டுகளை
அவிழ்த்து அவர் வீட்டில் வந்து சேர்த்துவிடுகிறார்!

வந்த பகவானும் கபீர் சிரமங்களுக்கு
ஆறுதல் சொல்லவும் இல்லை! வேறுமார்க்கம் கூறவுமில்லை!

இதில் முக்யம் என்னவென்றால்?

இத்தனை சிரமத்துக்கிடையிலும் தடித்த ஒர் வார்த்தையும்
பேசவில்லை, எந்த அசம்பாவிதமும் கபீர் செய்யவே இல்லை!



உ

கபீர் அடங்கி அமைதியாகவே

“இறை நாட்டத்திலும்; குரு உணர்விலும்!!!

ஆனந்தமாகவே இருந்தார்! அவருடைய தாய் தந்தையர் சொன்னார்கள் அடா கபீர்! நம் குலமத குருமார்கள் மௌலவி இருக்கிறார் காஜி இருக்கிறார்கள் அவர்களிடம் சென்று ஞானம் பெற்றுக் கொள்ளலாமே இங்கே ஏன் இப்படி அடிபட்டு சாகவேண்டும் என வருத்தத்துடன் சொன்னார்கள். கபீர் கேட்கவில்லை.

கபீருடைய எண்ணம்!

எப்படியாவது ஸ்ரீ சத்குரு வாக்காக ஒன்றை பெற்று விட்டால் போதும்! பின் அனைத்து குருகிருபையும் தானே நம்மை வந்தடையும் என எண்ணி ஓர் உறுதி பூண்டார். தம் ஸ்ரீ குருதேவர் அதிகாலை நான்குமணி அளவில் கங்கையில் நீராடச் செல்வதை அறிந்தார்.

ஓர் நாள் தாம் அதிகாலை மூன்றுமணிக்கே கங்கையில் ஸ்நானம் செய்து விட்டு கௌபீனதாரியாய் ஸ்ரீ குருதேவர் இறங்கி வரும் படிக்கட்டில் அவர் வரும் வழியில் மல்லாந்து

“தெய்வ கிருபையால் படுத்துக் கொண்டார்.”

மை இருட்டாக இருந்தமையால் ஸ்ரீ ஸ்வாமிகள் வைத்திருந்த மங்கலான விளக்கொளி கபீர் படுத்த நிலையை காட்டவில்லை.

“ஸ்ரீ குருதேவரின் வலதுபாதம் அவர் மார்பில்” பட்டது.

ஸ்ரீ குருதேவர் அதிர்ச்சியே உற்று விட்டார். ஏதோ ஓர் ஜீவனை மிதித்து விட்டோமே எனக் கருதி

அதற்கு அபயஸ்தமாக ஹரே ராம் ஹரே ராம்

என உணர்வு நிலையில் சப்தம் கொடுத்து தாம் அடுத்த படியில் குதித்து திரும்பிப் பார்ப்பதற்குள் கபீர் - ஸ்ரீ குருதேவரின் திருவடிகளை தீண்டி நமஸ்கரித்து விட்டு அப்பால் சென்று விட்டார்.

குழந்தைகளே!

“ஸ்ரீ கபீர் திருவடி தீட்சையும்,

மஹாமந்திரோபதேசமும் பெற்ற நிலை இதுவாகும்.



இந்த அளவுக்கு சிரத்தையும் மனோ வைராக்யமும்
விவேகமான ஓர்மித்த சிந்தனையும் இருந்தால்
"உணர்ந்த பக்தியும்! அனுபவ ஆத்ம ஞானமும்"!
சித்திக்கும் எனத் தெரிகிறது. இங்கு இனம், மதம், மொழி முக்கியமல்ல. உள்ளுணர்வே முக்கியம்!!

ஸ்ரீ சத்குரு ஸ்பரிச தீட்சையும் மந்திரோபதேசமும் பெற்றுக் கொண்ட தன்மையினால் மறுநாள் அருணோதயத்தில் ஓர் தாலத்தில் பழங்கள் புஷ்பங்கள் இவைகளை வைத்து தம் இரு கரத்திலும் பவ்யமாக ஏந்தி ஸ்ரீ சத்குரு காணிக்கையாக ஸ்ரீ குருதேவர் ஆஸ்ரமம் சென்றார். ஸ்ரீ குருதேவரின் ஏனைய சிஷ்யர்கள் கபீர் சொன்னதை நம்பவில்லை. வாசல் முகப்பில் கபீர் புஷ்ப பழத் தட்டுடன் நிற்கிறார். ஸ்ரீ குருதேவர் உள்பகுதியில் சற்று தூரத்தில் தம் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் சிஷ்யர்கள் ஸ்ரீ குருதேவரிடம் கபீர் ஸ்ரீ பாத ஸ்பரிச தீட்சை பெற்றதையும் மந்திரோபதேசம் வாங்கியதையும் சொல்லி விளக்கம் கேட்கிறார்கள். ஸ்ரீ குருதேவருக்கு ஆத்திரமும் கோபமும் உண்டாகிறது. எங்கே அவன் என உக்ரமாக கேட்கிறார்? அதோ என வாசலில் நிற்கும் கபீரை சுட்டிக் காட்டுகிறார்கள்.

"கோபம் பாபமறியாது"

என்ற பழமொழிப்படி கபீரைப் பார்த்தவுடன் ருத்ரனைப் போல் கோப வேசம் கொண்டு தம் காலில் மாட்டி இருந்த மரப்பாதுகையை கழற்றி கபீரை நோக்கி அதி வேகமாக வீசினார்!

"கபீரோ சுகர் அவதாரம், ராமானந்தரோ நாரதர்" அவதாரம்.
"கபீர் வியாசபுத்திரன். நாரதரோ பிரம்ம குமாரர்."
"கபீர் திருஷ்டி கர்த்தா; பிரம்மாவோ சிருஷ்டி கர்த்தா"
"கபீர் பார்வையில் பலப்படுத்துவார்; பிரம்மா செய்கையால் பலப்படுத்துவார்.
இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல!

கபீர் பொறுமையின் அம்சம்!!
பிரம்மா அகந்தையின் அம்சம்!!

இங்கு பொறுமை பிரத்யக்ஷமா என அகந்தை சரிபார்க்கிறது. பின் அகந்தை தான் மறைந்து பொறுமையில் லயமாகி விடுகிறது!



உ

இங்கு

“பொறுமையின் பலம் அனுபவ ஞானபலனாக மிளிர்கிறது”!!

“அஹந்தையின் பலன் பயமாக தான் ஒடுங்கி மயமாகிவிடுகிறது”!!

மேலே சொன்னது தத்துவ விளக்கம்

இனி சொல்லப்போவது “அனுபவத்தின்” விளக்கக் கதை!
அதாவது ஓர் கதையைச் சொல்லி விளக்கி அக்கதை அனுபவ ஞானத்தில்
முடிவு பெற்று கருத்துடன் முடிவு பெற வேண்டும்.

ஸ்ரீ குருதேவர் வீசிய பாதுகை கபீரின் நெற்றியில்
புருவமத்தியில், அதாவது ஆக்ஞையில், அதாவது பரியட்டகத்தில்,
பட்டு குருதி கொட்டுகிறது. அங்கு
நெற்றிக்கண் (அறிவுக் கண்) திறக்கப்படுகிறது!
கபீர் அப்பாதுகையை தம் நெற்றிக் கண்ணுடனே சேர்த்து இருகரம்
கொண்டு பற்றிக் கொள்கிறார்!

அங்கு வேதனை இல்லை, வேற்றுமை களையப்படுகிறது.
களையப்படுகிறது:- அங்கிருந்து பிடுங்கி அகற்றப்படுகிறது.
கரையப்படுகிறது:- அதை அங்கேயே மயமாக்கி பலனுக்கப்படுகிறது!

அங்கு கபீர்

அனைத்தையும் ஆத்மாவாக அறிந்தார், பின் அடுத்த க்ஷணம்,
அனைத்தையும் பரமாத்மாவாக உணர்ந்தார், பின் அனுபவத்தில்,
அனைத்தையும் பரம்பொருளாக அனுபவம் பெற்றார்!

குழந்தைகளே!

முன் சொன்ன தத்துவ விளக்கத்தில்
குரு சொரூபத்தை சற்று தாழ்த்தியும் சிஷ்ய சொரூபத்தை சற்று
உயர்த்தியும் கூறியதைக் கண்டு திகைக்கிறீர்களா??

அதன் விளக்கத்தை இனி உணர்வீர்!



உ

சாமான்யகுரு:- (சக்தி குரு) தம் வல்லமைக்காகவும், தம் புகழுக்காகவும், தம் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் தம் சக்திகளை சிஷ்யர்களுக்கு கொடுப்பதற்காகவும் "தர்மாபிரவர்த்தி" ஆவர்

தெய்வீககுரு:- சிஷ்யர்களை தெய்வீகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவர். தன் புகழும் சிஷ்யர்கள் புகழும் உலகில் நிலவ வேண்டுமென சற்று குறைந்தோர் கூட அமைதிபெற்ற தர்மா நிவர்த்தி குரு ஆவர்

சத்குரு:- சிஷ்யர்களை உயர்த்தி தம்மை தாழ்த்தி தெய்வத்துடமையமாக்கியவர். தெய்வீகத்தை உணர்த்தி பரமார்த்திகத்திற்கு தாம் ஏணியாக இருந்து சிஷ்யர்களை ஏற்றிவிட்டு தாம் இருந்தவர். (ஏணி பரண் ஏறாது) காலாதீதமானவர்!

நம் சத்குரு ஸ்ரீ ராமானந்தரை சற்று நோக்கவும்!

இங்கு குருதேவரிடம் இனத்துவேஷம் இருக்கிறது.
மதத்துவேஷம் இருக்கிறது.
வித்வத்வம் இருக்கிறது.
ஆச்சாரம் அனுஷ்டானம் இருக்கிறது.

இங்கு நம் கபீரிடம் இந்த நான்குமே இல்லை எனத் தோற்றுகிறது.

ஆனால் இதன் காரணம்

மனோ எண்ணமே பயம்! அதுவே பலிதம்!!

ஓர் சமயம் கங்கைக்கரையில் பட்டுநூல் நூற்றுக் கொண்டிருந்த நம் கபீர் சிஷ்டர்கள் புடைசூழவந்து கொண்டிருக்கும் நம் ஸ்ரீ ராமானந்த ஸ்வாமிகளை காண்கிறார். மீண்டும் ஓர் மீண்டு முறை ஸ்ரீ ராமானந்த ஸ்வாமிகளை சந்திக்கிறார். ஸ்வாமிகள் காணவில்லை.

அவரை கண்டவுடன் இவருக்கு இயல்பாகவே
ஓர் ஈர்ப்பு ஏற்படுகிறது!

அத்துடன் கபீருக்கு ஓர் வலிய எண்ணமும் தோற்றுகிறது.

காரணம்:- இவர் வளர்ந்த இடம் அவ்விடம். இவர் சைவமாக உண்டாலும் சாப்பிட்ட இடம் அவ்விடம். இவர் பழக்க வழக்க பாவனை தோஷம் அவ்விடம்

அவ்விடம் எனச் சொன்னது மிலேச்ச சகவாசம்



உ

மிலேச்சன் என்றால் பாபத் தொழிலையே தம் உயிராகக் கொண்டவன்.
நீசன் என்றால் பஞ்சமா பாதகங்களை விளையாட்டார்த்தமாக செய்பவன்.
இந்த கபீர் அயோனி சம்பந்தனாக இருந்தாலும், சுகப் பிரம்ம ரிஷியாக
இருந்தாலும், ஓர் தாமரை இலையில் இவன் மிதந்து வந்து தமால் கைகளில்
அகப்பட்டுக் கொண்டாலும், கங்கையில் மிதந்து வரும் சமயம்
"ஸ்ரீ பகவானால் கங்கையில் அமிழ்த்தப்பட்டு ஜலம்
குடித்து திக்குமுக்காடி, பகவத் பிரேமை போய், உடல்
இன்ப துன்ப பிரமை பிடித்து வந்ததனால்"!!! ??
ஓர் தோஷமான எண்ணம் தோற்றிற்று

அத்தோஷ எண்ணம்:— இவர் பிராமணர் நாம் துலுக்கன்!!
இவர் இந்து நாம் முஸ்லீம்!!!
இவர் வேதம் கற்றவர் நாம் குரான் படித்தவன்!!!
இவர் ஆச்சார சீலர் நாம் அனாச்சாரி

இப்படிப்பட்ட ஓர் உத்தம மஹானுக்கு நாம் எப்படி சீடனாக
முடியும்? அவர்தான் நம்மை சேர்த்துக் கொள்வாரா? இவர் சீடர்
கள் தான் நம்மை ஏற்றுக் கொள்வார்களா?
என அந்த துவேஷத்தை பதிவு செய்து விட்டார்!
பின் இவரை ஸ்ரீ பகவானே தடுத்தாட் கொண்டதால்
ஸ்ரீ பகவான் கிருபையினால் நாம் அவரை அடைய முடியும்
என உறுதி கொண்டார், நம்பிக்கை கொண்டார்,
விரதம் பூண்டார். வைராக்யம் பூண்டார்!!
ஆனால்!!!

முன்பதிவேடு முழுமையாக அழிக்கப்படவில்லை.
இவர் வைராக்யத்தினால் மனதின் எழுச்சியாகிய
புத்தியின் கற்பனை விகாரம் மேலும் அடையாமல்
நிறுத்தப்பட்டது ஆனால் அன்று உறுதி செய்த
சித்தம் பதிவேடு இவரை உறுத்திக் கொண்டே இருந்தது!
இந்த சித்தத்தின் முடிவே நடந்த நிகழ்ச்சிகள்!



உ

இந்த சித்தத்தின் பதிவேடுகள் ஸ்ரீ ஸ்வாமிகளின் சிஷ்யர்களால் கொடுத்த அடி உதை வசைமாரியால் அகன்றது. ஸ்வாமிகளின் துவேஷ வார்த்தைகளினாலும் காரி உமிழ்ந்ததாலும்

"ஸத்குரு தேவரிடம் உயர்ந்த பக்தியும்"!!

"ஸத்குருவை உண்மையாக உணர்ந்த பக்தியும்"!!!

"ஸத்குரு பாதுகா சேவையினால் உணர்ந்த ஞானமும்"!!!!

"ஸ்ரீ சத்குரு பாதுகையினால் அடித்து அறிவுக்கண்ணை திறந்த தன்மையினால் ஸ்வயஞானானுபவம்" பெற்று அதில் நிலைபெற்றார்.

குழந்தைகளே! ஸ்ரீ குருதேவர் நடத்தும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் "ஓர் பின்னணி இருக்கும்" அல்லது "ஓர் முன்விளைவு இனி இருக்கும்"

"அதை அந்த ஒன்றே உணரும்" இதை எவரும் அறியவும் முடியாது; உணரவும் முடியாது; ஏன் திரிகர்த்தாக்களும் உரை முடியாது; உணர்ந்து புகழவும் இயலாது. அதற்கும் அறிய மனமும் இல்லை; உரை அறிவும் இல்லை பின் எப்படி இது ஆகும் என கேள்வி எழுகிறதா?

வெட்டவெளியில் திடீரென ஓர் சுழிக் காற்று தோன்றுவதைப்போலவும், கருகத்தனை ஆலவிதையில் தோற்றம் இல்லாமல் பின் பிரம்மாண்ட ஆலவிருட்சம் தோன்றுவதைப் போலவும் அங்கு

"பரசொரூப ஸ்திதி அப்போதைக்கப்போது தோன்றும் பின் அது நமக்குள்ளேயே மயமாகும்"

"அங்கு நம் மனம் செல்லாது; நம் அறிவு அங்கு பிரகாசிக்காது"

இங்கு ஸ்ரீ குருதேவரின் விசித்திரப் போக்கை எவரும் கண்டு கொள்ள முடியாது!



உ

1. கௌதமர் தம் உத்தம சிஷ்யன் ஜாபாலா சத்யகாமனை 20 ஆண்டுகள் மாடுமேய்த்து வரச்செய்தார்.
2. அதே ஜாபாலா சத்யகாமன் தன் குருகுலத்தில் தம் உத்தம சிஷ்யனை உபகோசலனை பட்டினியாக போட்டே சித்ரவதை செய்தார்.
3. ஓர் குருதேவர் தம் மூட சீடனை வெகுமட்டமாய் வாங்கியே ஒரு உபதேசமும் செய்யாது தாம் மறைந்து பின் ஓர் யௌவன மாதுவுக்கு 6 ஆண்டுகள் சேவை செய்யப் பணித்து பின் உண்மையாக்கினார்!
4. ஒரு குருதேவர் ஓர் மாணவனை 15 ஆண்டுகள் சேவை செய்யச்செய்தும் பின் கடைசி காலத்தில் குருதேவருக்கு தொழுநோய் உண்டாகியும் இரண்டு கண்கள் குருடாகியும், ஒருகால் ஊனமாகியும் இந்த நிலையில் தம்மை மாற்றி அந்த நிலையில் இரத்தையுடன் சேவை செய்த மாணவனை கடுமையாக அவதூறாக திட்டியும், காறி உமிழ்ந்தும், ஒருகாலால் எட்டி உதைத்தும் படாத பாடுபடுத்தி பின் அருள் பாலிக்கிறார்

குழந்தைகளே! இப்படியே குருசிஷ்யபாவனைகளை ஏராளம் எழுதிக் கொண்டே போகலாம். இவை அனைத்தும் சிஷ்யனுக்கு மனோபலத்தை கொடுப்பதற்காகவும் அமானமான குருசோதனைகளை எரித்து மனோநாசம் செய்வதற்காகவும், தூல நல்வினை தீவினைகளை அனுபவித்து தீர்த்து சுத்தப்படுத்துவதற்காகவும்,

"அமைந்த அனுபவ ஞானபாடமாகும்!!!

இங்கு ஸ்ரீ குருதேவர் ராமானந்தர் தம் உத்தம சிஷ்யன் கபீரை வேறுவிதமாகவும் பரீட்சிக்கிறார்!

எப்படி என்றால்!!

ஓர் சமயம் காசியில் கோரக்கன் என்ற சித்த புருஷன் ராமானந்தரை எதிர்த்து வித்தைகளாலும், வாதங்களாலும் வெல்லவருகிறான். அதுசமயம் கபீர் தெய்வாதீனமாக அங்கு வந்து நிலைமையை அறிந்து, குருதேவர் ஆசியை பலவந்தமாக வாங்கி (வாங்கியதைப் போல்)



உ

கோரக்கனை வெல்கிறார் கபீர்! குழந்தைகளே! இதில் நாடகம் வெகு அழகாக அமைந்திருக்கும். இதை நாடகபாணியில் தருகிறோம் உணர்க.

குருதேவர் :- ஓஎம் ஐயனே கபீர்! உன்னை அல்லவோ நான் நினைத்தேன்! நீ தக்க சமயத்தில் வராவிட்டால் என்னை இந்த கோரக்கன் பஸ்பமாக்கியதோடல்லாமல் இக்காசி நகரத்தையும் தம் யோக வன்மையால் பஸ்பமாக்கி இருப்பான்.

கபீர் :- ஹே சத்குருவார்யா! தேவாதி தேவா! இது என்ன சோதனை? இந்த சிறுவனுவது கோரக்கனை வெல்வதாவது? தாங்களல்லவோ கர்த்தா! இது ஓர் கருவிதானே! இதை ஓர் ஆயுதமாக பயன்படுத்தி இந்த ஆயுதத்தை வைத்து அந்த அஹங்காரத்தை அழித்தீர்!

குருதேவர் :- அது அப்படி அல்ல கபீர்! உன்னை ப்ரஷ்டன் என்றும், மாட்டுக்கறி தின்பவனென்றும் நீசமிலேச்சன் என்றும் உன்னை உதாசீனம் செய்தேனே! நீ அவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் தக்க தருணத்தில் என்னை காப்பாற்றினையே! நீ இல்லாமல் நான் உயிரோடு இருக்க முடியுமா?

கபீர் :- ஹே பிரபோ! இந்த அபசார வார்த்தைகளை சொல்லி மேலும் எம் அறத்தையே கொல்கிறீர்கள்! என்னை உங்கள் கருணைப்ரபாவம் (என சொல்லி ஸ்ரீ குருதேவரின் பாதங்களை உறுதியாக பற்றிக் கொண்டு கண்ணீரால் அவர் திருவடிகளுக்கு அபிஷேகம் செய்தான்.)

குருதேவர் : (கபீரை தூக்கி ஆலிங்கனம் செய்து உச்சி மோந்து சொல்கிறார்) அடா எம் கண்மணி! எம தீருக்கு நந்தபாலா! உன்னை எவ்வண்ணம் போற்றுவது? காக்கைக் கூட்டத்தைப்போல் 100 சீடர்கள் இருந்து என்ன பயன்? நீ ஒருவன் எமக்குப் போதும் உலகின் தர்மத்தை ஸ்தாபிக்க. உன்னைப் போய் கீழ்ஜாதி என்றும் மிலேச்சன் என்றும், பிரஷ்டன் என்றும் எம் அருகில் வரவொட்டாமல் விரட்டி விரட்டி அடித்தோமே எம் குற்றங்களை மன்னிப்பாயா? (என கசிந்து உருகினார் ஸ்ரீ குருதேவர்)

கபீர் :- கபீருக்கு வார்த்தைகள் வாயில் இருந்து வரவில்லை அவர் பாதங்களை சுற்றிப் பிடித்த வண்ணம் ஹே பிரபோ! ஹே பிரபோ!! என கதறி அழுத வண்ணம் ஹே குருதேவா! இந்த நாயடியேனுக்கு எந்த வகையில் எல்லாம் கருணை மழை பொழிகிறீர்கள் எனச் சொல்லிய வண்ணம் எழுந்தான்.



உ

ஹே சத்குரு நாதா! எத்தனை அழகாக திறம்பட ஏதும் அறியாதவர் போல நடிக்கிறீர்களே! உங்கள் நடிப்பை அந்த ஆதி சேஷனையும் அதன் மேல் சயனித்திருப்பவரும் கூட அறிய முடியாது. அந்த ஸ்ரீ பகவானே மாயாவி! அவன் நடிப்புக்குக் கேட்கவா வேண்டும். ஆனால் நித்ய சொரூபனான நீங்கள் அவனையும் மிஞ்சி விட்டீர்கள். ஸ்ரீ பகவானே தோன்றாத் துணையாக இருந்து தம் மாயையை வைத்து எங்களை மயக்கி விளையாடுகிறான். ஆனால் தாங்களோ அந்த மாயா வேஷம் போடவில்லை! பிரத்யக்ஷ தோன்றும் துணையாக இருந்து கொண்டே கங்கைக்கரையில் பட்டுநூல் நூற்றுக் கொண்டிருந்த எம்மை ஓர் உந்துதல் கொடுத்து

"உம் காந்த சக்தியால் எம்மை இங்கு ஈர்த்துக் கொண்டீர்!"
"எம்முள் இருந்து கொண்டே உம் வல்லமையை காட்டினீர்!"
யாம் ஓர் கருவியாகவே இருந்தோம்! எமக்குள்ளே இருந்து அத்தனை சக்திகளையும் காட்டினீர்!
கோரக்கன் அஷ்டசித்திகளை செய்தான்! தாங்கள் ஞானசக்தியால் அவைகளை அடக்கினீர்! தங்கள் அடக்கத்தால் அவன் ஆணவமும் அழிந்தது! அவன் வித்வத்தால் வாதாடினான்; தாங்கள் ஸ்வய அனுபவத்தால் வென்றீர்கள்!!
"கோரக்கன் காட்டியது சித்து என்ற சொத்தை" (பயனற்றது)
"தாங்கள் நாட்டியது ஆத்ம வித்தை!!" (அதுவானது)

ஆகவே!
"ஆத்மஞானி ஒருவனே இப்படி திறம்பட நடிக்க முடியும்"

மற்றவர்கள்!
"நான் நான் என்றும் எனது எனது என்றும் அடித்துக்கொண்டு அழிய வேண்டும்"

இதை உணரும் போது
உத்தம சத்சிஷ்யனிடம் எந்த வல்லமைகளோ, தெய்வீக ஆற்றல்களோ இருக்க முடியாது. இருக்க நியாயமும் இல்லை; அனைத்தும் ஸத்குரு தேவருடையதே.



உ

ஸ்ரீ ஜெயதேவருடனும் அவர் சிஷ்யன் க்ரௌஞ்சகிரி அரசனிடமும் நடந்த ஓர் உரையாடலின் குற்ற உணர்வு!

அன்புக் குழந்தைகளே! ஸ்ரீ ஜெயதேவர் வியாச பகவான் அம்சம்.

வியாசர் ஓர் சமயம் பல மகரிஷிகள் முன்னிலையில் மூர்த்தித்துவேஷம் செய்ததாகவும், அதாவது ஸ்ரீமந் நாராயணனே பரதெய்வம் என்றும் மற்றும் தேவ தெய்வங்கள் அனைத்தும் அம்மிதம் அல்ல வென்றும் ஸத்யப்ரமாணம் செய்தாராம். அப்படி அவர் பிரமாணம் செய்யும்போது கங்கையில் முழங்கால் அளவு ஜலத்தில் நின்று கொண்டு, இருகரங்களாலும் ஜலத்தை அள்ளி தாரைவார்த்துப் பிரமாணம் செய்தாராம். அந்த கங்கை ஜலம் அவர் இருகைகளிலும் முழங்கை வழியாக வழிந்து சிந்தியதாம். ஆகவே அவர் பாதம் முதல் முழங்கால் வரையும், அவர் கை விரல்களிலிருந்து முழங்கை வரையும், பாபத்திற்குள்ளாயிற்றாம். அதனால் ஜெயதேவராக அவதரித்த சமயம் ஆறு திருடர்களால் அவர் கால்களை முழங்கால் அளவும் கைகளை முழங்கை அளவும் துண்டிக்கப்பட்டது.

பின் ஸ்ரீ ஜெயதேவ ஸ்வாமிகளை க்ரௌஞ்ச நாட்டு அரசன் தூக்கி தம் அரண்மனையில் வைத்து அந்த ரணங்களை மருந்திட்டு ஆறச் செய்து தம் ஆஸ்தானத்தில் தம் குல குருவாக்கிக் கொண்டான். சில காலங்களில் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய தர்ம பத்தினியையும் கொணர்ந்து அவருடன் சேர்த்து வைக்கிறான். ஸ்ரீ ஸ்வாமிகளின் கைகளும் கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் கண்ட அவர் மனைவி பத்மாவதி நெருப்பிலிட்ட புழு எனத் துடிக்கிறாள்!

பத்மாவதி:— ஓ எம் பிராண நாதா! பதிபரமேஸ்வரா! இது என்ன கோரம்? இந்த நிலை தங்களுக்கு எப்படி ஏற்பட்டது? சிறு புழு பூச்சிக்கும் துன்பம் தராதவராயிற்றே! கருணைமூர்த்தியான தங்களுக்கா இந்த கதி?

ஸ்ரீ ஸ்வாமிகள்:— அம்மா பத்மா! இதற்காக ஏன் இப்படி வருந்துகிறாய்? விதிவசத்தால் கைகளும் கால்களும் இழந்தோம். இதை ஏன் இத்தனை பெரிதாகக் கொள்கிறாய்?



உ

பத்மாவதி:- விதிவசம் என்றால் அவ்விதியை செய்தது யார்? அப்படி என்ன குற்றம் செய்து இத்தண்டனை அனுபவிக்கிறீர்?

ஸ்ரீ ஸ்வாமிகள்:- பெண்ணே! ஆத்திரம் கொள்ளாதே! விதி வலியது, அதைத் தடுக்க கர்த்தாக்களாலும் ஆகாது அமைதி கொள்.

பத்மாவதி:- உங்களை இந்நிலைக்கு ஆளாக்கிய அக்கொடியவர்கள் யார்?

ஸ்ரீ ஸ்வாமிகள்:- அம்மா பத்மா ஆத்திரம் கொள்ளாதே. ஆத்திரம் அறிவு நாசம். எம்தவன் ஒருவன் இருக்க அம்மை நோவானேன்?

பத்மாவதி:- அம்பாக வந்தது யார்?

ஸ்ரீ ஸ்வாமிகள்:- இறைவனே ஓர்தலைவர் தனக இருந்து யாம் வேண்டாம் எனச் சொல்லியும் உயிர் கொல்லியாகிய பொன்னும் பொருளும் அள்ளித் தந்தான். அவனும் அதைக் கொடுக்கும் போது இது தாங்களுக்குத் தேவை இல்லை தான்; ஆனால் என் தாயாருக்கு ஸாது போஜனக் காக தேவைப்படும் எனச் சொல்லிக் கொடுத்தான். எம் விதிவசத்தால் இறைவனே திருடர்கள் வேஷம் தரித்து வந்து எம் கை கால்களை துணித்துவிட்டு (பொருள்களை கொள்ளைகொண்டு எம்மை) ஓர்பள்ளத்தில் உருட்டி விட்டு சென்று விட்டார்கள். பின் அதே இறைவனே இந்நாட்டு அதிபதியாக இருந்தவன் அங்கு வந்து எம்மை தூக்கி மருந்திட்டு ரணத்தை ஆற்றி பத்திரமாக வைத்திருக்கிறான். உன்னையும் அங்கு தனியாக இருக்க வேண்டாம் என்று இங்கு அழைத்து வந்ததும் நம் இறைவனே!

பத்மாவதி:- எல்லாம் இறைவன் தான்! ஆனால் தாங்கள் யார்? ஓர் உத்தம ஞானி! உங்களை இந்நிலைக்கு ஆளாக்கியவன் எப்படி இறைவனாவான்? அவன் கருணை மூர்த்தி! பொன் பொருளுக்கு ஆசைப்பட்டவர்கள் கொடிய மூர்க்கர்கள். அந்த கொடிய திருடர்கள் ஓர் ஞானியை தண்டித்தார்கள் என்றால் அது பொருந்தாது! அந்த இடத்திலேயே அவர்கள் பஸ்பமாக வேண்டாமா?? அல்லது அவர்கள் கண்கள் குருடாக வேண்டாமா?

ஸ்ரீ ஸ்வாமிகள்: உடனே நம் ஸ்வாமிகள் இடைகுனிந்து மனைவி பத்மாவதியின் வாயை தம் மொண்டிக் கரங்களால் பொத்தினார். மேலும் சொன்னார்:- ஓ எம் பதிவிரதா ஸ்ரோண்மணி! என்ன வார்த்தை சொன்னாய்? இது முறையா?



உ

இப்படி கடூரமான வார்த்தைகள் உன் வாயில் வரலாமா? நீ உத்தமியாயிற்றே! சாதாரண உலகியல் மாந்தர் இவ்விதம் கூறலாம். அவர்கள் அறியாத்தன்மையில் கூறினாலும் தோஷமில்லை. நீயோ அறிவுடையவள்! ஓர் பதிவிரதை! அம்பாள் மஹாலக்ஷ்மி இனி இவ்வாறு சாதாரணமக்களைப் போல் கடினவார்த்தை கூறாதே!

பத்மாவதி:- ஸ்வாமி! ஹே ப்ராணநாயகா! என்னை மன்னிக்கவும்! உங்கள் நிலையைக் கண்டால் எந்த பத்தினிப் பெண்தான் இப்படி புலம்பாமல் இருப்பாள்? அவர்கள் அந்த பொன் பொருளை கொண்டு செல்ல வேண்டியது தானே? உங்களை ஏன் இந்த நிலைக்கு ஆளாக்க வேண்டும்? உங்களை எப்படி அவர்கள் தீண்ட முடிந்தது?

ஸ்ரீஸ்வாமிகள்:- அம்மா பத்மா! உன் கணக்கு தவறுவது ஒன்று உன்னிடம் கூறுகிறேன் அதை நீ சரிபார்! எம்மை எப்படி நீ மதிக்கிறாய்?

பத்மாவதி:- ஸ்ரீ ஹரி ஜகந்நாதனின் அன்பு பக்தராக! தன்னை உணர்ந்த ஓர் அனுபவ ஞானியாக!!

ஸ்ரீஸ்வாமிகள்:- அப்படியானால் ஓர் உணர்ந்த பக்தனையும், அனுபவ ஞானியையும் "அவர்கள் சார்ந்திருக்கின்ற பாவத்தை" "ஓர் சாமான்ய ஜீவன் தொடமுடியுமா"?? நன்றாக சிந்தி!

"அந்த பாவத்தை ஒத்த தகுதி உடையவர்கள் மட்டும்தான் அதை தொடமுடியும்"

அப்படியானால் அவர்களை சாமான்யர்கள் என்றும் திருடர்கள் என்றும் ஏன் நிந்திக்க வேண்டும்?

"பூர்வ கர்மாவினால் பாவம் தானே சுட்டிக்காட்டப்பட்டது" தொன்றன அனைத்தும் அனைத்தும் நினைக்கதொன்றன; அதாவது தின்றன அனைத்தும் அனைத்தும் நினைத்தின்றன!

"இவ்வுலகம் "கணக்கு தீர்க்கும்" இடம் தானே! வாங்கியதைக் கொடுக்க வேண்டும்! கொடுத்ததை வாங்க வேண்டும்!! இதில் பற்று வரவு தொடர்ந்து வந்து கொண்டே வரும்!



2

"அனுபவ ஆத்மஞானம் பூர்த்தி ஆனால் பற்று வரவு முடிந்து விடும்" எனச் சொல்லி முடித்தார்!

பின் ஒரு சமயம்

இறைவன் இருமையிலே ஸ்ரீ ஸ்வாமிகளின் கை கால்களை துண்டித்த அதே திருடர்கள் ஆறு பேரும் கள்ளச் சாதுக்கள் வேஷம் போட்டு கிரௌஞ்சகிரி அரச அவைக்கு தானம் கேட்பதாக வந்தார்கள். ஆனால் ஸ்வாமிகள் அவரை இன்னார் எனத் தெரிந்து கொண்டார், ஆனால் காட்டிக் கொள்ளவில்லை.

அவர்களை மஹான்களாக மதித்து அவர்களுக்குப் பாத பூஜை செய்யும்படி அரசனை பணித்தார்!

அரசன் பாதபூஜை செய்யும் போது அவர்கள் முகத்தைக் கவனித்தான்.

அவர்கள் அகத்திலுள்ளது அவர்கள் முகத்தில் தெரிகிறது!!!

அந்த சாதுக்களின் பூஜையை முடித்து அவர்கள் ஓய்வெடுக்கச் சென்றபின் அரசன் ஸ்வாமிகளிடம் கேட்கிறான்.

அரசன்:- ஜெகத்குருநாதா! ஜெயபிரபோ! இவர்கள் உண்மையில் சாதுக்கள் என்று சொல்கிறீர்கள்?

குருதேவர்:- அதில் என்ன சந்தேகம்? ஏன் உனக்கு ஏதேனும் சந்தேகம் தோன்றுகிறதா?

அரசன்:- ஆமாம் ஸ்வாமி! இவர்களின் பார்வையில் திருட்டு முழி தெரிகிறதய்யனே! இவர்கள் உண்மையில் சாதுக்களல்ல!

குருதேவர்:- தேர்ந்தாய்! "அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்" எனச் சொல்லுவார்கள். அதைப் போலவே மஞ்சள் காமாலை நோய் கண்டவன் கண்களுக்கு அவன் பார்ப்பதெல்லாம் மஞ்சளாகத் தோன்றுமாம். அந்தத் தன்மை போல,

"குற்றவாளிகளை கண்டு கண்டு பழகிப் போனாய்"

ஆகவே சாதுக்கள் யார்? சோரர்கள் யார்? என உன்னால் கண்டு கொள்ள முடியவில்லை.



௨

அரசன்:- ஹே பிரபோ! நீங்கள் ஆயிரம் தான் சொல்லுங்கள். இவர்கள் உண்மை சாதுக்களல்ல!

குருதேவர்:- (வெகு சாமர்த்தியமாக) நீ யோகிகளை கண்டிருக்க மாட்டாய். அதனால் தான் இவ்விதம் பேசுகிறாய்! யோகிகளின் பார்வை இப்படித் தான் இருக்கும்.

அரசன்:- சரி தாங்களிடம் வாதாட இவன் யார்? தாங்களுக்குத் தெரியாததா அடியேனுக்குத் தெரிந்துவிடப் போகிறது? நான் ஓர் அறிவிலி உங்களிடம் போய் நான் வாதம் செய்தேனே! "குருவாக்குக்கு மறுவாக்கில்லை" என பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இருந்தாலும்

"என் தர்வார் பழக்க தோஷம்"!!!

என்னை இப்படி ஆட்டிப்படைத்து விட்டது. அதன் குற்றம் தான் என்னை மன்னியுங்கள் என சொல்லி ஓய்வெடுக்கச் சென்று விட்டான். மறுநாள் அந்த கள்ளச்சாதுக்களை வழி அனுப்பும் போது அவர்கள் பொன் ஆபரணங்களையும், தங்க மொகராக்களையும், காஷ்மீர் சால்வைகளையும், பட்டுப் பட்டாடைகளையும் தேவைக்கு அதிகமாகவே கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள். இங்கும் அரசனுக்கு சந்தேகம் வலுப்படுகிறது!

அரசன்:- (தனியாக கேட்கிறான்) குருதேவா! இதென்ன விபரீதம் பொன்னும், மணியும், அணிகலன்களும் அள்ளிச் செல்கிறார்களே! யோகிகள் பொன்னும் பொருளும் உயிர் கொல்லி என்றல்லவா சொல்லி ஒதுங்குவார்களே. இவர்கள் இன்னும் வேண்டும், அது வேண்டும், இது வேண்டும், என கேட்டு கேட்டு

"ஆசைகளில் மாள்கிறார்களே"!!!

இவர்கள் சாதுக்களாகவே தோன்றவில்லையே!

குருதேவர்:- தூர்த்தாய்! நீ அள்ளி அள்ளி கொடுத்தால் தானே உன் பாபங்களை அவர்கள் வாங்கிக் கொண்டு எரிக்க முடியும்!



2

அரசன் :— பாபங்களை இவர்கள் எரிப்பதா? ஆசை வசப்பட்ட இவர்களுக்கு பாபங்கள் பெருகுமேயன்றி பாபங்கள் போகாதே இதில் இவர்கள் என் பாபங்களையும் எரிப்பார்களா? அது எப்படி எனக்கு விளங்கவில்லையே?

குருதேவர் :— எம் அருமை செல்வா! இவர்கள் மஹா யோகிகளாகவும் மஹா தபஸ்விகளாகவும் இருப்பதால் வனத்தில் சென்று வேள்வி செய்யப் போகிறார்கள். அந்த வேள்வியில் போடுவதற்கே இந்த பட்டுப்பட்டாடைகள். வரும் அதிதிகளுக்கும் பிராமணர்களுக்கும் தக்ஷிணை கொடுப்பதற்காகவே பொற்காசுகளும் பொன் ஆபரணங்களும், சால்வைகளும் உனக்கு இது தெரியாது. அவைகளை வேள்விகளில் போட்டும், தானதர்மம் செய்தும் உன் வினையை பஸ்பமாக்குவார்கள்.

அரசன் :— குருதேவா! என்னை மன்னிக்கவும். "என் குற்றப்பார்வையும்" அதன் "பழக்க தோஷங்களும்" என்று அழியப் போகிறதோ நான் அறியேன். அனைத்தையும் தாங்கள் திருவடிகளிலேயே சமர்ப்பணை செய்து விடுகிறேன் என்னை மன்னியுங்கள் என சொல்லி அந்த சாதுக்கள் வேண்டியதை வேண்டியவாறு கொடுத்து அனுப்பினான் "குழந்தை அரசன்"!!!

எம் தவக்குழந்தைகளே! அரசனிடம் பொருள்களை வாங்கிச் சென்ற அச்சோரர்கள் வனம் மத்தியில் தாங்கள் இருப்பிடம் வந்ததும், அவர்களையும், பொருள்களையும் ரதத்தில் கொண்டு வந்து கொடுத்த காவலாளிகளிடம் ஆர்ப்பாட்டமாக கொக்கரித்து பேசுகிறார்கள். அதாவது!



2

ஏ அப்பாவி வீரர்களே! நீங்களும் உங்கள் மக்களும், உங்கள் அரசனும் ஏமாந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ராஜகுருவாக இருக்கிறானே

அந்த ஜெயதேவ் ஓர் கபடன்! ஓர் வஞ்சகன், ஓர் பொய்யன்!!! ஓர் உளதாரி!!! ஓர் சூழ்ச்சிக்காரன்.

நாங்கள் ஆறு பேரும் ஓர் அரசனிடம் சேவகர்களாக இருந்த நேரம். இந்த ஜெயதேவ் எங்கள் அரசனின் ராஜகுருவாக இருந்தான். இந்த ஜெயதேவ் பலகாலம் திட்டம் தீட்டி ஓர் நாள் அரசியின் அந்தப்புரத்தில் புகுந்து நவரத்னங்களையும் ஆபரணங்களையும் களவாடிச் செல்லும் போது கையும் களவுமாக பிடிபட்டான். எங்கள் அரசன் இவன் ருத்ராக்ஷ பூனை எனச் சொல்லி இவனுக்கு மரண தண்டனை கொடுத்து அந்த தண்டனையை நிறைவேற்றச் சொல்லி எங்க ஆறு பேருக்கும் ஆணையிட்டான். நாங்கள் இவனை வனத்தில் கொண்டு வந்து தலையைக் கொய்யாமல் ஐயோ பாவம்; இவன் ஓர் அந்தணனாக இருக்கிறானே என நினைத்து கொல்லாமல் கைகளையும் கால்களையும் மட்டும் துண்டித்து அந்த பாழும் கிணத்தில் தள்ளிவிட்டு போய் விட்டோம்! அப்படிப்பட்ட மஹா துஷ்டனை உங்கள் அரசன் ராஜகுருவாக ஏற்றிருக்கிறான். இந்த மஹாபாவி உங்கள் அரசனையும் உங்களையும் எந்த கதிக்கு ஆளாக்கப் போகிறானோ தெரியவில்லை என்பதா

"ஓர் மஹானை பழித்த காரணத்திற்காக"

பூமிமாதா தானே பிளந்து அந்த அறுவரையும் தமக்குள் இழுத்து அவர்கள் கழுத்து வரை புதையுறச் செய்து அழுத்தலானாள். அந்த அறுவரும் வேதனை தாளாமல் கதறினார்கள். அங்கு நின்றிருந்த அரசசேவகர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடி தம் நாட்டை அடைந்து, தம் அரசனிடம் நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தார்கள். அதுசமயம் ஸ்ரீ குருதேவரும் உடன் இருந்தார். அவரும் நடந்த நிகழ்ச்சிகளை கேட்டு பதறிப் போனார். ஸ்ரீ குருதேவர் அரசனை திசைதிருப்பி திருத்தும் நிமித்தமாக இவ்விதம் சொன்னார்.



உ

குருதேவர்:— அந்த மஹான்களுக்கா இந்த கதி?

அரசன்:— குருதேவா! மஹான்களா? அவர்களா? அந்த சோரர்களா? நீங்கள் வெளுத்ததெல்லாம் பால் என்பதைப் போல் அந்தக் கள்வர்களையும் மஹான்களாக கருதினீர்கள். உங்களைப் பழித்ததை தெய்வம் பொறுக்கவில்லை. ஆகவே பூமிமாதா அவர்களை அப்படி தன்னோடு இழுத்து சித்ரவதை செய்து கொல்கிறாள் போலும்?

குருதேவர்:— அடே அறிவில்லாக் குழந்தாய்! மஹான்களைப் பழிக்காதே. அவர்களை பழித்து பகைத்தால் கும்பி நரகம் செல்ல வேண்டி வரும். யாம் சொல்வதை நம்பு.

அரசன்:— குருதேவா! மீண்டும் மீண்டும் இவ்வாறு சொல்லிச் சொல்லி என்னை மாற்றி விடாதீர்கள். நான் இனி என் கணிப்பில் உறுதியாக இருப்பேன். திருடர்கள் திருடர்கள் தானே! ஏன் அதை மாற்றி மறைக்கப் பார்க்கிறீர்கள்?

குருதேவர்:— ஏ விபரம் அறியா குழந்தாய்! அவர்களைப் பற்றி நீ இன்னமும் உணரவில்லை. எம்மை ஞானியாக உணர்கிறாயல்லவா பின் ஏன் அவர்களை யோகிகளாக உனக்கு உணர முடியவில்லை!

"ஞானியின் நிலை வேறு! யோகியின் நிலை வேறு"

இவ்விருவரிலும் பார்வையிலும் செயலிலும் பேதமுண்டு.

ஞானியிடம்:— சாந்தி, அமைதி, பொறுமை, திருப்தி, கருணை, அபேத திருஷ்டி உண்டு! ஆனால் சித்திகளில்லை.

யோகிகளிடம்:— வேகம், சினம், தேவைக்கு அஹந்தை, சாதிப்பதில் கருணையின்மை, நிறைவற்ற குறைவு, எதிலும் பேதபார்வை உண்டு. ஆனால் சித்திகளுண்டு.

ஆகவே இவை மூலமாக அவர்களை திருடர்கள் என நீ கருதுகிறாய்! மந்திரங்கள், யோகங்கள், சித்திகள் வேண்டுமானால் மேலே கண்ட யோகிகளின் குணங்கள் ஒருவரிடம் நிறைந்திருக்கும். இது குற்றவுணர்வு அல்ல. அவர்களின் வழிமுறை அவ்விதம் தான் அமையும். நீ இங்கு உள்ள பரிபாறு குணங்களை அங்கு எப்படி காண முடியும்?



2

அரசன் :- குருதேவா! நீங்கள் என்னதான் சாந்தி சமாதான வார்த்தைகள் சொன்னாலும்

"என்மனம் ஏற்க மறுக்கிறதே"

அதன் காரணம் என்ன? உங்கள் திருவடி தரிசனமும் உபதேச கருத்துக்களையும் இத்தனை காலமாக நன்று அனுபவித்தாலும் என்மனம் விகாரமடைய காரணம் என்ன?

குருதேவர் :- அருமைகுழந்தாய்! நீ என்னதான் எம்மிடம் ஆத்மஞானபாடம் உணர்வு பூர்வமாக கேட்டு வந்தாலும்

"வியவகாரத்திற்காக சபையை அடைகிறாய்"

அந்த பழக்க தோஷம் உன்னிடம் வந்து வந்து மோதுகிறது.

உன் சபையில் இயல்பான குணம் என்ன??

"குற்றம் குறைகளை கண்டு கண்டித்தலும் தண்டித்தலும்"

சமீபகாலமாக நீ பழகும் சத்வ குணவாசனை

இனி மேலோங்கும் போது முன் கூறிய குற்றம் குறைகள் வாசனை தானே குறையும்! அப்புறம் நீ என்னதான் முயற்சி செய்தாலும் அந்த குற்றம் குறைகள் வரவே வராது! ஏன் நீ எண்ணிப்பார்க்கவே முடியாது

சாந்தியும், குரோதமும் மாறிமாறி வரும்.

எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அது மேலோங்கும் அடுத்தது தானே சிறிது சிறிதாக பலம் குன்றி அழியும்;

அரசன் :- நம் சபைக்கு வந்த அறுவரும் அதாவது இப்போது பூமியில் புதைந்து துன்பம் அனுபவிக்கும் அறுவரும் குற்றவாளி இல்லையெனச் சொன்னால் அவர்கள் பூமியில் புதையுண்டு அவஸ்தைபட காரணம் என்ன? அவர்கள் எம்மையம் பண்ண தடை வந்த காரணம் என்ன?



உ

குருதேவர்:- அடா எம் கண்மணி! பரிதாபத்துக்குரிய குழந்தாய்!
உன் சுவாசபழக்க தோஷம் இப்படி மாற்றிப் பார்க்கத் தோன்றுகிறது ஏன் இதை இப்படிப்பாரேன்!!!
குழந்தாய்!
'அவர்கள் மஹா யோகீஸ்வரர்களாக இருப்பதால் தான் ஆழமான கருணை கூர்ந்து

குழந்தைகளே! உங்கள் தபஸ் போதும்! உங்கள் வேள்வி போதும்! உங்கள் பக்தி போதும்! இந்த சத்காரியங்களுக்காக இனி அலைந்ததும் போதும்!
உங்களையாம் அன்பாக ஏற்றுக்கொள்கிறேன்!

என

ஸ்ரீ ஜெயதேவரை தீண்டிய மஹா பாக்யத்திற்காகவும் மேலும் அர்ச்சனைமொழியால் அவரை அர்ச்சித்து "அதிவிரைவாக" எம்பாக்கியத்தைபெற்றீர்களென.
இது அடைமொழி.

என தம்முள் ஏற்றுக்கொண்டு **"மகாசமாதிநிலை"**!!! கூடி இருக்கிறார்கள் கூட்டி வைத்திருக்கிறாள்!!!

எம் குழந்தாய்! நன்றாக இதைக் கவனி. நீ இத்தனை காலமாக எமக்குச் சேவை செய்து வந்தாயே உனக்கு இப்படி சமாதி நிலை கூடியிருக்கிறதா? அல்லது
இந்த நாயடியேன் தான் ஐம்பது வருஷம் பக்தியும், பகவத் சேவையும், பாகவத சேவையும் செய்து வந்தேனே எனக்குத் தான் இந்த சமாதி கிடைத்திருக்கிறதா??? அவர்கள் பாக்யவான்கள்! மகா யோகீஸ்வரர்கள்!! மகா தபஸ்விகள்
என தம் மென்மைக் கரங்களால் தட்டிக்கொண்டே ஆனந்த கூத்தாடினார்.



உ

எம் அன்புக்குழந்தாய்!
அவர்கள் அவஸ்தைப் படுவதாக எண்ணாதே.
ஆனந்த களிப்பில் மூழ்கி இருக்கிறார்கள் என உணர்வாயாக!
அவர்கள் வேள்வி தடை செய்யப்படவில்லை!
அவர்கள் வேள்வி பூர்த்தி ஆகிவிட்டதென உணர்!!
அவர்களுக்கு தானம் செய்த நீ பாக்கியவான்!!!
உன்னை எம் குழந்தையாகப் பெற்ற யாமும் பெரிய பாக்கியவான்!!!

கதை கேட்கும் எம் அன்புக்குழந்தைகளே! மேலே கொடுத்த நிகழ்ச்சிகளை உங்கள் அறிவு பூர்வமாக சிந்திக்க வேண்டும்.
குற்றங்களாக கண்டு கண்டு களித்த கண்களும்!
குறைகளாக கேட்டு கேட்டு ரசித்த காதுகளும்!
அவைகளை அப்படியே ஏற்று விரிவடைந்த மனமும்!
உண்மை உணர்வாக மாறினாலொழிய

**பேதஉணர்வு நீங்காது.**

பேதஉணர்வு நீங்கி அபேத திருஷ்டி பெற்றாலொழிய ஞானம் சாத்தியமாகாது! இதற்காகத்தான் எம் ஔவை சொன்னாள் "குற்றம் ஒன்றும் பாராட்டி திரிய வேண்டாம்" என்றும் "கோள் களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்" எனவும் சொன்னாள்.

இதன் பொருளை கவனிக்கவும்

குற்றம் ஒன்றும் பாராட்டி திரிய வேண்டாம் :— இதைத்தான் இன்னொரு இடத்தில் சொல்லும் போது "குற்றம் பார்க்கின் (இறை) சுற்றம் இல்லை" இல்லை யெனவும் சொன்னாள். அதாவது இதை உணர வேண்டும் "உலகம், உடல், உறவு, பொருள்" என்றுமே நாமரூபம் தானே; அதில் குற்றம் குறைகள் பின்னிப் பிணைந்து



உ

விளையாடுவதால் அது நம் "மனமே குற்றம் குறை தானே"!!
எப்படி இந்த மனம் குற்றம் குறைகளாக பாவனை செய்ததோ அதே பாவ
னையை இந்த மனதை வைத்துத்தானே நீக்க வேண்டும். வேறு மார்க்
கம் ஏது? அனைத்தையும் இறைவன் உடைமையாகவும்,
இறைவன் நிகழ்ச்சிகளாகவும் பார்ப்பதைத் தவிர வேறு மார்க்கம்
இல்லவே இல்லை! அப்படிப் பார்க்காத பட்சத்தில்
அனைத்தும் இறைவன் சுற்றமாகத் தெரியாது. அதற்கு மாறாக
அனைத்தும் உறவு (பாச) சுற்றமாகத்தான் தெரியும்!!!
அடுத்து

கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்:—
இங்கு கொலையெனச் சொன்னது மனிதக்கொலையல்ல. உயிர்க்கொலை
அல்ல. ஸத்யத்தை (கொலை) மறைப்பவர்களுடன்
சேராதே. அதாவது ஆன்மீகமாயுள்ள தெய்வீகசக்தியும்
ஸ்வய ஞானானுபவமும் இல்லாதவர்களுடன் சேராதே என
பொருள்படும். அடுத்து
களவு எனச் சொன்னது பொன், பொருள், ஆபரணம் இவை
களை களவு செய்வதைச் சொல்லவில்லை. ஆனால் இங்கு
"பேராசையை" குறிப்பிடுகிறாள். அதாவது பேராசை கொண்
டவனும், அப்படி பெரிய ஆசையினால் சேர்த்த பொருள்களை,
"தேவைக்கு அதிகமாக சேர்த்து வைக்கப்பட்டவன்"
இவனே திருடன். இவனே களவு செய்பவன். இவனே
குற்றம் குறைகளுக்கு உடையவனாகிறான். தேவையைப்
பெருக்கும் போது உடனே திருட்டு எண்ணமும் உடன் உருவாகும்.
மேலும் சுருக்கமாக நீ உணர்வது.

குற்றம் குறைகளாக பார்த்துப் பார்த்து, கேட்டுக் கேட்டு, பேசிப்
பேசி பழகிய உங்களுக்கு
இது இறைவன் செயலென்றும், இறைவன் பொருளென்றும்,
மாற்றிப் பழகுங்கள். இங்கு அவஸ்யம் குற்றம் குறைகள்
தோன்றாது!



# ஓர் ஞானியின் பிறவி ரகஸ்யம்!!

அருள் ஞானக் குழந்தைகளே! தாவகம்

ஓர் ஸாதுவின் தெய்வாதீனமாக சஞ்சாரம் நடந்து கொண்டிருந்தது. ஓர் நாள் அவர் வந்த பகுதி பாலைவனம் போல் வறட்சியாக இருந்தது. அது சமயம் மணி பகல் 12 இருக்கலாம். நல்ல வெய்யில், ஓர் நிழல் பகுதி கூட இல்லை போலும். ஓர் ஓரமாக நின்று கொண்டு அந்த பகுதியை கடக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். அது சமயம் ஓர் சேணியன் (செருப்பு தைக்கும் தொழிலாளி) ஒரு ஜோடி பாதுகையை அந்த ஸாதுவின் பாதங்களுக்கு முன்பாக வைத்து மஹராஜ் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என மிகவும் பணிந்து கனிவான மொழியில் பகர்ந்தான். இந்த ஸாதுவும் அவன் முகத்தை சற்று உற்று கவனித்தார்.

ஆனால்!

அந்த சேணிய பக்தன் தன் மனதில் ஓர் அபிலாட்சையோடு அதாவது அவனுக்கு திருமணம் ஆகி பல வருடங்களாகியும் புத்திர பாக்யம் இல்லை போல் தெரிகிறது. அந்த புத்திர பாக்யத்திற்காக பாதுகைகள் செய்து ஸ்ரீ அடியார்களுக்கு மட்டும் இலவசமாக கொடுத்து வந்தான். அவன் ஒவ்வொருவரிடமும் பாதுகையை கொடுக்கும் போது வாய் கொண்டு புலம்பி கேட்காமல் மானசீகமாகவே

"எனக்கு ஒரு புத்ர சம்பத்தை அளிக்க வேண்டும்"

என பிரார்த்தித்துக் கொள்வான். இதை எவரும் அறியவோ உணரவோ முடியாது அது அதிரகஸ்யமாக இருந்தது. இன்றும் இதே நிலையில்தான் மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டு அந்த பாதுகையை அந்த ஸாதுவின் திருவடிகளில் மாட்டினான். அவரும் அதை ஏற்றுக் கொண்டார்.

அந்த சூழ்நிலையில் அது அவருக்குத் தேவைப்பட்டது.

அது சமயம் அவர் எண்ணம்.

"இவன் நல்லவனாகவும், ஓர் பக்தனாகவும், ஓர் பரம ஏழையாகவும் இருக்கிறான்". இவன் செய்த இந்த சத்தான கைங்கர்யத்திற்கு ஏதேனும் கொடுத்தால் தகும்!. என்ன கொடுக்கலாம்? என யோசித்தார்.



உ

தற்சமயம் தொடம்பதற்கொன்றும் இல்லை (என்று முடிக்காமல்)

"பிறகு பார்ப்போம்"

(அங்குதம் சங்கல்பத்தை முடிக்கவில்லை, அதை தொடர் கதையாக்கிக் கொண்டார்)

"இவர் இதை அறியார்; அதை அது அறியும்."

அங்கு ஓர் ஸாது எப்படி இருக்க வேண்டுமெனில்!

இவன் நல்லவன், ஓர் பக்தன், ஓர் ஏழை இந்த பதுமைக்கு அந்த பதுமை ஏதோ ஓர் உபகாரம் செய்தது. அந்த பதுமைக்கு நீ என்ன செய்ய வேண்டுமோ அதை நீயே செய் என பொறுப்பை அங்கு விட்டு விட்டால்

"அது பார்த்துக் கொள்ளும்"

ஏதேனும் கொடுக்கலாமே, என்ன கொடுக்கலாம்? என தன் சங்கல்பத்தை முடிக்காமல் தொடர்ந்து வைத்து விட்டால் அந்த தொடர்ச்சிக்காக, மீண்டும் தொடம்பதற்காக ஓர் தாவம் தாங்க வேண்டும்.

குழந்தைகளே!

அந்த ஸாதுவும் அந்த பாதுகையை மாட்டிக் கொண்டு சென்றார். அந்த பாதுகையின் வேலை முடியும் வரை வைத்திருந்து பின் அதை கழற்றி எறிந்து விட்டார். பல காலம் சென்றது அவர் சமாதி கூட தன்நிலை எய்தும் போது அவர் முன்பு போட்ட சங்கல்பத்தின் கணக்கு அவரை வழிமறித்தது.

இதை நாடகபாணியில் தருகிறோம்!

காலதேவன்:- மஹராஜ்! தாங்கள் அதனுடன் கலக்க முடியாது எம்மிடம் உங்கள் (சங்கல்பத்தின்) கணக்கு ஒன்று உள்ளது அதை முடித்து விட்டு செல்லலாம் என மிகவும் பணிவுடன் கேட்டான்.

ஸாது:- ஓ காலதேவனே! உன்னிடம் பேசுவதற்கும், உன் வசம் வருவதற்கும் எமக்கு அவகாசம் இல்லை.

காலதேவன்:- எம்மிடம் வர வேண்டாம், எம்முடன் அமர்ந்து பேசவும் வேண்டாம். எம் கணக்கை முடித்து விட்டால் உம்மை யார் தடை செய்ய முடியும். உம் நிலையோ இறைவனுக்கும் அதிகமானதே! ஆனாலும் ஒன்றை தாங்கள் உணர வேண்டும் அதாவது



உ

காலாதீதமாய் அந்த ஒன்றோடு கலப்பவர்க்கு எம்
காட்சியோ எம் வார்த்தைகளோ தேவை இல்லைதான்.
இப்போது தாங்களோ தர்க்கம் பண்ணவோ பேச்சுவார்த்தை
நடத்தவோ யாம் அழைக்கவில்லை. யாமும் நசிகேதசுக்கு
ஆத்மஞானபாடம் புகட்டியவனென்றும் உமக்குத்
தெரியும். "அந்த உணர்வுடன் கூடியவன்"
உம்மை தர்க்கத்திற்காக அழைப்போமா? யாம் இருநிலைகளி
லும் செயல்படுகிறோம். எமக்கு மூன்று நாமாக்கள் உண்டு

1. எமதர்மன் அதாவது இயம நியம தர்மங்களுக்கு
கட்டுப்பட்ட தர்மதேவன்.
2. காலதேவன் அதாவது காலத்திற்கு உட்பட்ட அனைத்
தையும் ஏற்றுக் கொண்டு பக்ஷிபாவம் அற்றிருப்
பவன். அதாவது அங்கு செயல் (கர்மா) இருக்கும்
பயனோ யாம் ஏற்பதில்லை.
3. அந்தகன் அதாவது கண்கள் இல்லாதவனைப்போல்
அதாவது உலகியல் ஜீவர்களை நல்லவன் தீயவன் என
பாராமல் கர்மி, பக்தன், ஞானி எனப்பாராமல்
கர்மா சம்பந்தத்தை மட்டும் பாரபக்ஷ தோஷம்
இல்லாமல் எடுத்து விகிதாச்சாரப்படி பகிர்ந்து
கொடுத்து அவர்கள் அனுபவிப்பதை கண்ணில்
லாமல் காண்பவன்.

"எந்த பலனையும் பாராமல் செய்வதனால் யாம் அந்தகனே"!!!
யாம் எப்படிப்பட்டவன் என தாங்கள் அறியாததா?
எப்படியோ பரகர்மா நிமித்தமாக ஓர் காரியத்தை
ஏற்றுக்கொண்டீர்கள். அந்த காரியத்தையோ அதன்
காரணத்தையோ யாம் அறியோம்; தாங்கள் சங்கல்ப
ரீதியான ஓர் கர்மாவை மட்டும் யாம்
அறிவோம்.

வாது:- ஓ காலதேவனே! தர்மதேவனே! அக்காரியம்
என்னவெனச் சொன்னால் யாம் அறிவோம். கார
ணம் யாம் மறந்து விட்டோம். மலினமனச் செயல்
பாட்டை யாம் அடிக்கடி மறந்து விடுவதுண்டு! அது
எமக்குத் தேவையும் இல்லை. அவை கனவு போல் வந்து
போவது தானே ஆகவே அதற்கு யாம் முக்யத்வம் கொடு
ப்பதில்லை.



உ

காலதேவன்:- ஹே பிரபோ! ஓர் உத்தமபக்தன் சேணியன்
சிவமாக ஓர் சங்கல்பம் எடுத்தீர். அதாவது
என்ன கொடுத்தால் தரும் என்றும்; ) இருபார்ப் போலும் என்று
என்ன கொடுக்கலாம் என்றும்.)
“ஓர் இச்சையை தரித்துக் கொண்டீர்”!!!
இச்சையே பிறவியின் வித்து இது தாங்கள் அறியாததா?
சாது:- ஆழமான இச்சைகளுக்குத்தான் அதாவது
பதிவேடுகளுக்கு தான் ஜன்மா உண்டு. இது ஒன்றும்
அத்தனை முக்கியமாகத் தெரியவில்லையே!
காலதேவன்:- ஹே மஹானுபாவா! உங்களுக்கு உங்கள் இச்சை
ஆழமில்லாதது தான்! ஆனால் அவன் இச்சை வலுமை
யாகவும் “பிறவியைப் பற்றியதாகவும்”
அமைந்திருக்கிறதே! ஓர் தாம்புக்கயிறு இரு முனியும்
எதிர்ச்சியானால் முடிச்சு (வினை) வந்தே தீரும். ஆனாலும்
உங்கள் முனை லேசாக அசைந்து தவ்வையை கொஞ்சம் தான்
தாக்கியது! ஆனால் அவன் முனை வேகமாக எதிர்ச்சியாகி
ஓர் சர்ப்பத்தைப் போல் சீறி உங்கள் முனையை
வேகமாக இழுத்துக் கொண்டதே!
சாது:- கடகடவென சிரித்தார் ஓ எம் அந்தகனே!
நடந்தது எப்படியோ நடந்து முடிந்து விட்டது. இங்
கே எம்பாடம் சாதகர்களுக்கு ஓர்
முக்கியமாக அமையட்டும். தம் தூவத்தை ஓர்
பதுமையாகவும் இறைவனை கருவியாகவும்
பயன்படுத்திக் கொண்டால் அவஸ்யம் எந்த வினையும்
தொடராது. இது உறுதி. சரி யாம் என்ன செய்ய
வேண்டும்? இது ஓர் விளையாட்டு தானே!
அநாயசமாக முடித்துவிடுகிறேன்!



உ

தாவதேவன்:— ஹே பிரபோ! தாங்கள் அந்த சேணிய பக்தனுக்கு ஓர் மகவாக பிறக்க வேண்டும். அச்சேணியனின் இடைவிடாத ஆசையும் அதுதான்.

ஸாது:— இனி எச்சரிக்கையாக இருப்போம். மேலும் இப்பிறவி எம் அசிரத்தையினால் வந்ததல்ல. அதற்கும் ஓர் காரணம் இருக்கும். அது பின்னால் தான் புரியும்.

குழந்தைகளே!

அந்த ஸாதுவும் தம் வினைவசத்தால் அச்சேணியன் மனைவியின் கர்ப்பத்தில் புகுந்தார். பத்து மாதத்தில் ஓர் ஆண் மகவாக இப்பூமியில் ஜனித்தார். அவர் தொட்டில் குழந்தையாக இருக்கும் போதே பசிக்காக அழுவதில்லை. நேரம் கண்டு தாய் எடுத்து பாலூட்டினால் அது பசியாறும். விளையாடும் பருவத்திலும் அது எவருடனும் சேர்ந்து விளையாடுவதும் இல்லை. தனக்குத்தானே தெய்வீகமான விளையாட்டு விளையாடும். இல்லையென்றால் அது பெரும்பாலும் தனித்தே ஒர் ஓரமாக கண்களை மூடி அமர்ந்து விடும். உணவோ உடையோ தாய் தந்தை சாப்பிட்டு கொடுத்தால் சரி. தாமாக எதையும் கேட்பதில்லை. பள்ளியும் செல்வதில்லை. அனைத்து பாடங்களும் அதற்கு சரளமாக வந்தது போலும்? அந்த பாலகனுக்கு வயது பன்னிரண்டு ஆகிறது. எந்த நேரமும் தேஜஸான முகத்துடன் புன்முறுவலுடன் இருப்பான். முகத்தில் வேறு எந்த கேள்விக்குறியும் இராது. எந்த குணதோஷங்களும் கிடையாது. எவருடனும் பேசியது கிடையாது. இதில் ஒர் விசித்திரம் என்னவென்றால்

அந்த ஜீவத்தை இந்த உலகிற்கு தந்த ஸ்ரீ மாதா பிதாவை ஒரு தடவையாவது அம்மா என்றோ அப்பா என்றோ அழைத்ததில்லை. இது அந்த தாய் தந்தைருக்கு ஒரே ஆச்சரியமும் கவலையுமாக இருந்தது. நாம் பெற்ற குழந்தை நம்மை அம்மா அப்பா என அழைக்காமல் இருக்கிறதே என்ற துக்கம் அவர்களை வாட்டியது. ஆனாலும் குழந்தை அத்துறவியாக இருக்கிறதே தவிர ஊமை இல்லை பைத்தியமும் இல்லை என தெரிந்து கொண்டார்கள். அடி ஆழத்தில் ஒர் எண்ணம் இவன் ஓர் மஹானே. எங்கேயோ பிறக்க வேண்டியவன் நமக்கு புத்திரனாக பிறந்திருக்கிறான். இது நம்முடைய அதிர்ஷ்டமே. ஆனாலும் என்றாவது ஒர் நாள் இவன்



உ

நம்மை அம்மா அப்பா என அழைப்பான் என மன உறுதியோடு நம்பிக்கையாய் அதி ஆவலாக காத்திருந்தார்கள். அவனுக்கு வயது பன்னிரண்டு ஆகிவிட்டது.

இந்த சேரிபகுதியினருக்கு அவ்வூர் அரசன் மாளிகை கோட்டைவாசல் நான்கு புறமும் டமாரம் அடித்து ஜனங்களை உஷார்படுத்தும் வேலை கொடுத்திருந்தான் அரசன். ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் இந்த வேலை வரிசைக்கிரமமாக வரும். அன்று நம் சேணியன் குடும்பத்திற்கு வந்தது. அன்று அச்சேணியன் அவசரமாக வெளியூர் செல்ல வேண்டி வந்தது. தம் மனைவியிடம் இதுபற்றி சொல்லி வருந்தினான் அதாவது

பெண்ணே! இன்று நம் முறை டமாரம் அடித்து ஜனங்களை உஷார்படுத்தும் வேலையாகும். நான் அவசரமாக வெளியூர் செல்ல வேண்டியதிருப்பதால் தடைபட்டுள்ளது. எனக்குப் பதில் இன்று இக்காரியத்தை எவர் செய்வர்? எனக் கவலையோடு கேட்டுக் கொண்டிருந்தான் இதுவரை சகல நிகழ்ச்சிகளையும் வாசலில் ஒட்டுத்திண்ணையில் அமர்ந்து கண்டுகொண்டிருந்த இந்த ஸாது பையனுக்கு இக்குரல் எட்டியது போலும்? அதாவது!

பரமார்த்திகத்திலேயே ஒன்றி இருந்த இந்த ஸாதுகுமாரனுக்கு முன்ஜன்மா பாதுகையை போட்ட கடனுக்கு கடன்தீர்க்கும் பவனை வாய் திறந்தான்.

அம்மா! அப்பா!! கவலையை விடுங்கள். உங்களுக்குப்பட்ட கடனை யாம் அடைக்கிறோம் நீங்கள் ஊர் சென்று வரலாம். யாம் இன்று டமாரம் அடிக்கிறோம் என்றான். அவன் தற்காலிக பெற்றோர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. குழந்தையை தழுவி இருவரும் முத்தமிட்டார்கள். தந்தை ஊர் சென்றுவிட்டான். தற்காலிக தனயன் அன்றிரவு டமாரம் அடிப்பதற்காக தம் தோளில் அமர்ந்த வண்ணம் அரண்மனை சென்றான்.



உ

டமாரத்தை தோளில்மாட்டிய ஸாதுகுமாரன் அரண்மனை முதல்வாசலில் டமாரம் முழங்கினான். அங்கு அவன் சொன்ன வாசகமாவது

1. அறியாமை உறக்கத்தில் மூழ்கி இருக்கும் ஜீவர்களே விழித்தெழுங்கள். காலன் உங்கள் ஒவ்வொரு காலடியிலும் தொடர்ந்து வருகிறான். காலபாசத்தில் வீழ்ந்துவிடாமல் காலனை உதைத்தவனின் கால்களை பற்றுங்கள்! என்றான்.

அடுத்து அரண்மனை இரண்டாவது வாசலில் வந்தான் அங்கு டமாரம் முழங்கி சொன்ன வாசகம்

2. இறைவனை அன்னியமாய் காண்பது அஞ்ஞானம்! இறைவனை தமக்கு முன்பாக காண்பது பக்தி!! இறைவனை தமக்குள் உணர்ந்து அனுபவிப்பது ஞானம்!!!

அடுத்து அரண்மனை மூன்றாவது வாசலில் வந்தான்! அங்கு டமாரம் முழங்கி சொன்ன வாசகம்.

3. உங்களுக்குள் இருக்கும் ஜீவாத்மாவும் உங்களை தம்மாயா காரியத்தால் பாரபட்சம் இல்லாமல் விகிதாச்சாரப்படி நடத்தும் அந்த பரமாத்மாவும் ஒன்றேஎன உணர்வீர்!

அடுத்து அரண்மனை நான்காவது வாசலில் வந்தான். அங்கு டமாரம் முழங்கி சொன்ன வாசகம்.

4. உங்கள் இறைவனாகிய பரமாத்மாவும், நான் எனதை விட்டமையால் ஆத்மாவாகிய நீங்களும் நாமரூப குணம் குறி கடந்த அந்த காலாதீத ஒன்றும் ஒன்றே! அது சுகமே!! அது நலமே!!! அது சுத்தசிவமே என உணர்வீர்

என்று உரக்கச்சொல்லி அரண்மனை காரியத்தை விட்டு தம் காரணத்தோடு ஒன்றினான்.



## ௨

இந்த ஸாதுகுமாரன் அரண்மனை நான்கு புறமும் டமாரம் முழங்கி யதையும் "அவன் சொன்ன ஸத்ய வாசகங்களையும்"
அரண்மனை மேல்மாடத்தில் இருந்து நான்கு புறமும் கவனமாக கேட்டான் அரசன். அரசன் பூர்வபுண்ணிய மும் சர்வசதா
"ஞான வேட்கை யோடு" இருந்த தன்மையினால்
இந்த ஞான வாசகம் அவனை அப்படியே மாற்றிவிட்டது.
மனதால் அனைத்தையும் துறந்தான்!!!
அரையில் ஓர் துண்டு வஸ்திரம் மட்டும் அணிந்து கொண்டு
(துண்டு கட்டுதல்:- உலகைவிட்டே துண்டுபடுதல்.)
தம் கைகளில் ஓர் தாலத்தில் புஷ்பம் பழங்களுடன் ஸ்ரீ குருதேவரை நோக்கிப் புறப்பட்டான். ஸ்ரீ குருதேவர் சந்நதியில் வந்து அவர் காலடிகளில் தட்டை வைத்தான்

ஹே சத்குரு தேவா போற்றி!
சாந்த சொரூபா போற்றி!
சத்ய சொரூபா போற்றி!
சத்குரு வார்யா போற்றி!
நித்ய சொரூபா போற்றி!
நிர்க்குண சொரூபா போற்றி!
நிர்மல சொரூபா போற்றி!
நித்யானந்தா போற்றி!

ஹே பரம் பொருளே! நாயடியோமி உன் மலரடிகளை சரண்புகுந்தோம்!
தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம், முறையாக சென்றவர்க்கு
ஒருவார்த்தை சொல்ல குருவாய்க்கும் பராபரமே!
என்றபடி காலாகாலமாக ஏங்கிக் கிடந்த எமக்கு காலாதீதமான ஒன்றே தனக்கு ஓர் காலத்தை ஏற்படுத்திக் கொண்டு வலிய எம்மை ஆட்கொண்ட பெருமானே! எம்மை ஆட்கொள்வாயாக (எம்மை ஆண்டு மனதை கொல்வாயாக) என



உ

ஸத்குருவின் மலரடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து திருவடியைப்பற்றிக் கொண்டு கதறி அழுதான் அரசன். (இனி இவன் ஸாதுகுமாரன் அல்ல ஸத்குருவே)

ஸத்குரு:— அரசனை இருகரம் கொண்டு தூக்கியபடி அரசே! இதுஎன்ன விபரீதம்? தாங்கள் யார்? இந்த ஈனஜாதியினனை பரதேசி யார்? தாங்கள் கௌரவம் அந்தஸ்து என்ன? அடியேனுடைய தராதரம் என்ன? (சிஷ்யன் இடைமறித்தான்)

சிஷ்யன்:— போதும் ஐயனே போதும் இந்த ஈனவார்த்தைகளால் எம்மை கொல்லாதீர். தாங்கள் சொல்வதும் உம் நிலையில் பொருந்தும். நான் நான் எனமார் தட்டிக் கொண்டு இந்தமண் பொம்மை இந்த மண்ணை அஹங்காரத்தால் ஆள்கிறது. ஆனால் தாங்களோ அந்த பரத்தையே தம் சொந்தமாக்கி சுகித்திருக்கிறீர். அந்த பாக்கியத்தை எமக்கும் அளித்தருளும்! மேலும் இந்த புழுத்த நாயேன் அபிமானம், கௌரவம், அந்தஸ்து டாம்பீகம், கீர்த்தி என அழியும் உலக பட்டங்களை வாங்கி அந்த தற்புகழ்ச்சி என்னும் படுபாதாளத்தில் வீழ்ந்து கெட்டுப் போனேன். ஆனால் தாங்களோ எம்மேல் உதவ அக்கறையாக வந்து எம்மை தடுத்தாட் கொண்டீர். மேலும் உம்மைத் தரம் பார்க்க எமக்குத் தகுமோ? ஆனால் தாங்கள் எம்மை தரம் பார்த்து ஏற்றுக் கொண்டீர்!

ஸத்குரு:— குழந்தாய்! நீ இங்கு எதை எதிர்பார்க்கிறாய்?

சிஷ்யன்:— எதிர்பார்ப்பு ஏதைய்யனே! எதிர்பார்த்தால் ஏமாற்றம் தானே பலன்?

ஸத்குரு:— எதிர்பார்ப்பு இல்லையானால் உன் ஆசை என்ற எண்ணம் தான் என்ன?

சிஷ்யன்:— தாங்கள் ஸத்ய வாசகத்தை கேட்டபிறகு எதைக் கேட்க வேண்டுமென்ற ஆசை வரும்?

ஸத்குரு:— ஆசை இல்லையாயின் இங்கு நீ வர வேண்டிய காரணம் என்ன? இந்த காணிக்கை தான் எதற்கு?



உ

சிஷ்யன்:– ஹே பிரபோ! "காந்தம் இரும்பை கவர்ந்திழுத்ததை
போல் நீ எம்மை கவர்ந்து கொண்டாய் எம் பெருமானே"
என்றபடி எம்மை ஈர்த்துக் கொண்டாயே? இந்த ஜடமாகிய
தாலம் எப்படி இங்கு வரும்? இதன் உள்ளிருந்த தாங்களே
திட்டமத்தால் இழுத்துக் கொண்டீர்! இங்கு இயங்குவ
தற்கு என்ன திறன் இருக்கிறது?

ஸத்குரு:– இந்த புஷ்பம் பழம் கொண்டு வரக் காரணம்?

சிஷ்யன்:– ஹே சத்குருவாரியா! இது என்ன கேள்வி? புஷ்பம்
தாங்கள் இவ்யமலரடி! பழம் தாங்கள் இதயம்!!
இங்கும் அங்கும் இருக்கப்பட்டது
"வாலன்பிருந்த சுவையான மதுரம்"!!

ஸத்குரு:– எம்மை (எம் இருப்பை) நீ எப்படி உணர்ந்தாய்?

சிஷ்யன்:– ஓ எம் ஐயனே! உணர்வு தனியாக இல்லையே
பிரபோ! இதை வாக்கினால் தான் விவரிக்க வேண்
டுமென்றால் எமக்குள்ளே நீ இருக்க உமக்குள்ளே
யாம் இருக்க (இந்த) மனக்கவலை தீர வரம் அருள்வாய்?

ஸத்குரு:– குழந்தாய்! இங்கு கேள்வி தோன்றுகிறதே
இது எப்படி வந்தது?

சிஷ்யன்:– குருதேவா! இங்கு மனம் விகாரம் அடைந்தால்
அங்கு விவகாரம் (பிரச்சனை) வந்தே தீரும்! இந்த விகா
ரம் கேட்பதிலும் பார்ப்பதிலும் அப்போதைக்கப்போது
தோன்றுகிறது!

"அந்த விகாரத்தை விவகாரத்திற்கு
விடாமல் "விபரமாக" இருந்து
கொண்டால் விவகாரம் தொலையும்."

இதை தாங்கள் இருப்பையினால் உள்ளுணர்வாகவே
இருந்து வருகிறேன். இந்த விபரம் பரிபூரணமாக
தாங்கள் அருள் ஆசி வேண்டும்!

விபரம்:– உண்மை இன்மையை அப்போதைக்கப்போது
உணர்ந்து இன்மையை விட்டு உண்மையில் நிலைபெறுதல்
விபரமாகும்!



உ

இதை உணர முடியாதபடி முந்திரிக் கொட்டை போல்
"முந்தி முந்தி வருவது "அவசரமாகும்""
இங்கு நிதானமும் அளவற்ற பொறுமையும் வேண்டும்!
அதை பூர்த்தி ஆகுவதாக என ஆசீர் வழங்கினால் அது
போதும்!

குருதேவர் :- குழந்தாய்! ஆசி கூறுவது "கொடுப்பதும் எடுப்பதும்"
ஆகாதே நீ ஆசி என எதைக் கூறுகிறாய்?

சிஷ்யன் :- குருவாக்காக நீ நலம் பெறுவாய் சுகம் பெறுவாய் என
வாழ்த்துகிறீர்களே! அங்கு நீங்கள் எதை கொடுக்கிறீர்கள்?
ஆனாலும்!
எம்மை நம்பிக்கையினாலும், வைராக்யத்தினாலும்
அதை பெற்றுக்கொண்ட "திருப்தி" உண்டாகிறதே
அது போதும் உண்மையை உணர!

குருதேவர் :- குழந்தாய்! இங்கும் அந்த ஆசிவசனத்தை நோக்கும்
போதும் சந்தேகம் தானே தோன்றும்? நன்கு கவனி
நலம் பெறுவாய் என்றோ சுகம் பெறுவாய் என்றோ
எங்கள் ஆசிவசனம் வந்தாலும்
"பெறுவாய்" எனத்தான் சொல்கிறோமே தவிர
"பெறுக" என உனக்கு கொடுக்கவில்லையே!
இதை நீ எப்படி பெற்றதாகும்?

சிஷ்யன் :- ஓம் ஐயனே! உங்கள் வார்த்தையின் மாயாஜாலம்
தாங்கள் இருமையால் யாம் உணராதது என்ன?
கோடானு கோடி ஆசிவசனம் இருந்தாலும் இந்த
நலம், சுகம் எனச் சொல்வது உடல் உலக
பொருள்களின் சம்பந்தம் இல்லவே இல்லை

மனம் நலம் பெற வேண்டும்!
ஆத்மா சுகம் பெற வேண்டும்!!

இதுவே மஞானிகளின் ஆசி!



உ

அதாவது விஷய ஆசையென்னும் நோயிருள் சுகவீனமாக இருக்கும் மனம் நலம்பெற வேண்டும் (விஷய ஆசையை விடவேண்டும்)

ஆத்மா என்றென்றும் சுக சொரூபமே!

அப்படி சுகசொரூபமான ஆத்மாவை நான், என்னுடையது என்ற அஹங்கார அபிமானத்தால் ஓர் போர்வையாக்கி ஆத்மாவை மூடி இருக்கிறோம்! இந்த திரை நீக்கம் பெற்றுவிட்டால் அந்த க்ஷணமே ஆத்மா சுக சொரூபமே!

ஹே குருதேவா! ஹே பராத்பரா!! பரம தயாநிதி! இவைகளை யாம் சொல்லி விளக்க வேண்டுமென்பதில்லை அது பொருந்தாது ஆனாலும்!!

தாங்கள் எம்முள் இருந்து இப்படி இயக்குகிறீர்கள்! யாம் இயங்குகிறோம்!!

குறிப்பாக

ஸ்ரீ மஹான்களின் ஆசி ஒலியாக வந்து அது ஒளியாக மாறுகிறது! அதாவது வசிஷ்டர் வாயால் "பிரம்மரிஷி" என சொல்ல அதை கேட்க விரும்பிய விஸ்வாமித்திரரைப் போல் அந்த நலம் சுகம் ஒலியை ஸ்ரீ மஹான்களாகிய ஸ்ரீ சத்குருதேவர் வாக்கால் கேட்டால் அந்த க்ஷணமே அனுபவிதம் இது வேதாந்த கருத்துக்களாக் கூறும் மஹான்கள் வாக்கு

அதாவது

"ஒளி பரசொரூபம்"!

"ஒலி குருசொரூபம்"!!



உ

இன்பம் என்றால் உடல் உலக இன்பதுன்பமாகும்!
சந்தோஷம் என்றால் சகவாச தோஷம் இதுவும் துன்பமே!!
ஆனந்தம் என்றால் பசுத்தன்மையின் முடிவிடம் இது பேரானந்தத்தின் ஆரம்பம்!!!
பேரானந்தம் என்றால் பெயரளவில் ஆனந்தம் அது நிலைத்த ஆனந்தம் இல்லை! இது தெய்வீகம்!!!!
பிரம்மானந்தம் என்றால் அது நிலைத்த ஆனந்தம் அது பரமார்த்திகம்!
பரப்பிரம்ம சுகானந்தம் என்றால் சத்சித் ஆனந்தம். அது தாம் தானானது; தமக்கன்னியம் இல்லை. இந்த ஆனந்தத்தை சொல்வாரும் இல்லை, கொள்வாரும் இல்லை.
அந்தமஹான்களின் (ஸத்குருவின் வாக்காக வரும்) வாக்கு ஒலியாகவும் ஒளியாகவும் இருப்பதால்

பக்தியால் சித்தசுத்தி பெற்று,
வைராக்யத்தால் ஞானம் ஸ்திரப்பட்டு,
அனுபவ ஞானத்தினால் பழம் அதுவாகி

**"அதை சுவைக்க" !!!**
**ஸத்குரு வேண்டும் !!!**

அதாவது

அது நீ, நீ அது என முத்திரை வைக்க வேண்டும்

அதாவது

முத்திரை என யாம் சொன்னது ஸத்குருவின் சொரூப ஸ்திதியில் அது அது ஆன தன்மையினால் தானும் சிஷ்யனும் இரண்டற கலக்க வேண்டும். அப்படி இருவரும் சமுத்திரத்தில் உப்புக்கல் என கரைந்து கலந்து மய,, மாகுவதே சத்குரு சத்சிஷ்ய "**சுக சுயானுபவம்**"
இதுவே ஸத்குருவின் முத்திரை நிலை!
இங்கு!!



உ

ஸத்சிஷ்யன் **ஸ்வய சுகானுபவம்!**

ஸத் குரு **ப்ரத்யக்ஷானுபவம்!!**

அது **ஸத்சித்ஆனந்தானுபவம்!!!**

இதுவே இரண்டென்றுன், இரண்டும் ஒன்றென்றுன்; ஒன்றென்றும் இல்லையென்றே சத்குரு நாதா! இந்த காரணத்திற்காகவே மஹாகாரணத்துன்! திலிருந்து, காரண சொரூபமாக வந்து காரிய சொரூபமாக இருந்த எம்மை "வலிய வந்து தடுத்தாட் கொண்டீர்கள்!! இதுவே பிரம்மானந்த சுகக்கடல்" என ஆனந்தக் கூத்தாடி மயமாகி விட்டான்.

இப்போது அந்த ஸத்குரு மனதை சற்று இறக்கி தெய்வீக கற்பனையில் இதைச் சொன்னார்!

ஹே பரம்பொருளே! என்னே உன் நாடகம்? பழுதற்றிருந்த எமக்கு முன் ஓர் பழுதையை காட்டி அதைபாம்பென ஆடச் செய்து, ஓர் நாடகம் நிகழ்த்தி அதையும் ஆனந்தமாக முடித்து விட்டாயே.

என்னே உன் திறமை!!!

வாது = குற்றமற்றவர்

சேணியன் = பழுதை (கயிறு)

அரசன் = சர்ப்பம் அதாவது உண்மை உணர்வோடு இருந்தவன் அந்தன்மையினல் ஒருவாக்காலேயே சுத்தமாக்கபட்டவன். அதாவது கனிந்த பழமாகவே மரத்தில் அரசன் இருந்தான். குருதேவர் அவனுக்காகவே ஓர் தூலம் தாங்கி வந்து அந்த கனியைப்பார்த்தார். அது அவர் கரங்களில் தானே விழுந்தது. அதை அவர் சுவைத்தார்.

"ஞானம் கனி, அனுபவம் சுவை."



## சாட்சி நிலை!

ஓம் ஸ்வய அனுபவ ஞான மாணிக்கங்களே!

மாணிக்கத்தின் உள் ஒளிபோல் உங்களுக்குள்ளேயே அந்த அனுபவ ஞான ஒளி பிரகாசிப்பதாக. அதற்கு உங்கள் பொறுமை என்ற அடக்கமே உறுதுணையாகும். இந்த ஓர் இதழில் சாட்சி நிலை என்றால் என்ன என்பதை மட்டும் சுருக்கமாக சொல்லி முடிக்கிறோம்.

**சாட்சி:**— சாட்சியென்றால் பேதம் கடந்த இடமாகவும், அபேத திருஷ்டியாகவும் சொல்லப்படுகிறது. இது "தராசின்" நிலை போன்றது. தராசு என்றால் "சமம்" எனப் பொருள்படும். இதை நன்றாக கவனிக்கவும்; ஒருபுறம் அளவுகல், அதாவது எடைக்கல் அதாவது படிக்கல், அது எந்த உபயோகமும் அற்றது. மறுபுறம் உங்கள் உபயோகமான காய்கறிகளோ நவதானியமோ, பாத்திர பண்டமோ, மளிகை சாமான்களோ, நவரத்தின மணிகளோ, வெள்ளி பொன் ஆபரணங்களோ வைக்கிறோம். அங்கு அந்த தராசு நமக்கு எதைக் காட்டுகிறது என்றால் "இதற்கு இது சமம்" என பேதமற்ற நிலையை காட்டுகிறது. அதாவது உபயோகமுற்றதும் உபயோகமற்றதும் எமக்கு சமம் எனப் போதிக்கிறது. அப்படியானால்?

நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும், சுகமும் துக்கமும், உண்மையும் இன்மையும், லாபமும் நஷ்டமும், ஏற்றமும் இறக்கமும், வாழ்வும் தாழ்வும், வரவும் செலவும், புண்ணிய பாபமும் தெய்வ சந்நிதியில், அதாவது தெய்வீக நிலையில், சமமே தவிர பேதமில்லை. ஆனால்? ஜீவ நிலையில் அதாவது உலக நிலையில் பேதம் காணப்படுகிறது அதாவது பேதம் கற்பிக்கப்படுகிறது. அதாவது பேதப்படுத்தி குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்த குற்ற உணர்வே ஜனனம் மரணம், அதாவது அந்த குற்ற உணர்வை அனுபவிப்பதற்காகவே பற்பல நிலைகளில் பற்பல பிறவி எடுக்கிறோம். அந்த குற்ற உணர்வே குணதோஷங்கள். அந்த குற்ற உணர்வே நான் இப்படி இருக்கிறேன் நான் இப்படி ஆவேன் என தனக்குத் தானே சங்கல்பத்தை வகுத்துக் கொண்டு பிறவி எடுக்க ஏதுவாகிறது. இதற்கு இறைவன் பொறுப்பாக மாட்டான் "தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என் செய்வான்?" என்ற பழமொழிப்படி இந்த பேதமான குற்ற உணர்வே பிறவியைக் கொடுக்கிறது.

ஆகவே உலகம் வேண்டுமா? அந்த வாழ்வு வேண்டுமா? அதைச் சார்ந்த பிறவி வேண்டுமா? பேதத்தோடு வாழுங்கள். அதற்கு யாரும் இறைவனும் பொறுப்பில்லை.

ஸத்ய சொரூபம் ஆகவேண்டுமா? சர்வ சாட்சி நிலை பெறுங்கள். அபேத திருஷ்டியோடு இணையுங்கள். இங்கு சாட்சி" பாவனை ஒன்றே வழி. இதற்கு யாரும் இறைவனும் பொறுப்பாவோம். உலகம் வேண்டுமா? உண்மை வேண்டுமா? இதை முடிவெடுக்க வேண்டியது நீங்களே! — பாபா



1. குணங்களை விட்டாலன்றி ஜீவன்முக்தி இல்லை.
2. காட்சிகளை மறந்தாலன்றி ஜீவன்முக்தி இல்லை.
3. சாட்சி ஆனாலன்றி ஜீவன்முக்தி இல்லை.
4. தெய்வீகம் தானானாலன்றி ஜீவன்முக்தி இல்லை.
5. தெய்வீகத்தையும் விட்டாலன்றி ஜீவன்முக்தி இல்லை.
6. அகண்டபாவனை ஆனாலன்றி ஜீவன்முக்தி இல்லை.

ஓம்

ஆனால் இந்த ஆறும் எம்மை உணர்ந்தவர்கள் தம்மை உணர்ந்தவர்களே இது சத்யம்! சத்யம்!! சத்யம்!!!

**ஓம் இதுவே ஜீவன்முக்தி முத்திரையாகும்.**

எம் அன்பும், பண்பும், பணிவும், கனிவும் நிறைந்த குழந்தைகளே! உங்கள் அடக்கத்தினால் மனநலமும், ஆத்மசுகமும் பெறுவீர்களாக என ஆசி கூறுகின்றோம்!

ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளை, இல்லை, இல்லை, இல்லை எனத்தள்ளும் வைராக்யமும், சத்குரு தெய்வ நம்பிக்கையும், தான் உங்கள் ஜீவன்முக்தியாகும்.

பற்பல புஸ்தகங்களையும், பற்பல மடல்களையும் படித்திருப்பீர்கள், படித்துக்கொண்டும் வருகிறீர்கள். ஆனால் முடிவாக எமக்கும் உங்களுக்கும் சொல்லும் "**மஹா ரகஸ்யம்**" மஹாமௌனம் என்ற இதழில் பக்கம் 44–51க்குள் அடங்கி இருக்கிறது. அவைகளை அதி சிரத்தையுடன் உணர்ந்து உங்களை உங்களுக்குள்ளேயே அதாவது "**அது நாம், நாமே அது**" என **உறுதியுடன்** இருப்பீர்களாக. யாம் உங்களை முடித்து விடுகிறோம்.

"**ஜீவன்முக்தர் நீங்களே**"

இது சத்யம்! இது சத்யம்!! இது சத்யம்!!!

பாபா.



உ

இதில் கண்ட ஆறிலும் ஒன்றை
அனுபவ நிலையில் கொணர்ந்தால்
போதும். அதாவது $\frac{1}{6}$ எடுத்தால்
போதும் அந்த ஐந்தும் அந்த ஒன்றில்
**அடங்கிவிடும் !!!** பாபா.



உ

குழந்தைகளே!

ஓர் உத்தம ஞானி தன் தூலத்திலும் சிரத்தை வைக்கமாட்டான். அதாவது இது வேண்டும் இது வேண்டாம் என எண்ணமற்றிருப்பான். அதேபோல் தன் இருப்பிடத்திலும் சிரத்தை வைக்க மாட்டான். அதாவது தற்காலிகமாக இறைவன் எப்படி அமைத்துக்கொடுத்தானோ அதை அப்படியே ஏற்றுக் கொள்வான். அதை

"மேலும் அபிவிருத்தி செய்யமாட்டான்", அதாவது தேவைகளைப் பெருக்கமாட்டான்!

எல்லாவற்றையும் இறைவன் உடைமையாகவும், அசையும் பொருள் அனைத்தையும் இறைவனாகவும் உணர்வான். காரணம் அவை அவித்யா கார்யமாகவும், மாயா கார்யமாகவும் இருப்பதால் அதற்கு முக்யத்வம் கொடுக்க மாட்டான்.

மெய் அன்பர்களை சிஷ்யனாக பாராட்டவும் மாட்டான்; தன்னை ஓர் ஆசானாகவும் பாவிக்கமாட்டான்!

அன்பு குழந்தைகளே! ஓர் உண்மை!

ஓர் உத்தம ஞானி தன் வாரிசாக அதாவது தன் அடுத்த பிரதிநிதியாக, தனக்கு அடுத்த பட்டத்திற்காக, தம் அன்பர்களை அமர்த்துவதும் இல்லை; அதற்காக உருவாக்குவதும் இல்லை! காரணம்

"அவனையும் தம் நிலைக்கு கொணர்ந்து தன்னோடு கரைத்து கலந்துவிடுவாரே தவிர தனியாக விட்டு வைக்கமாட்டார்"!!



உ

எப்படி என்றால்

இங்கு பாடம் படிப்பு எல்லாம் வாய் ஞானமாக ஏட்டுக் கல்வி யாக இருக்காது. அனைத்தும் அனுபவ ஞானமாக இருக்கும். இங்கு பேதம் இல்லாத் தன்மையினால்,

இவர்கள் அனுபவானந்தமே ஸ்வய மாக இருப்பதால் குருசிஷ்யபாவனை குறையும் அதீதம் மேலோங்கும்!

அதாவது

மனம் மலினமாக இல்லாமல் மறைத்தாக இருப்பதனால்

ஸத்குருவுக்குரிய மரியாதை இருக்கும் கௌரவம், பயம், பயத்தால் உண்டாகும் கலக்கம் அவஸ்யம் இராது!

அதாவது

ஸத்குரு ஓர் தந்தையானால் ஸத் சிஷ்யன் ஓர் "விபரம் அறியா குழந்தையாக"! இருப்பான். சில சமயம் ஸத்குரு ஓர் விபரம் அறியா குழந்தை யாகமாறுவார்! அது சமயம் அந்த ஸத் சிஷ்யன்

அன்புத் தாயாவான்!!!

இந்த இருநிலையிலும்!

கண்டிப்பும் இல்லை; தண்டிப்பும் இல்லை!!

கண்டிப்பும் தண்டிப்பும் அங்கு தோன்றினால் அவஸ்யம் குண தோஷம் வந்தே தீரும்! குண தோஷம் வந்தால் அவஸ்யம் கர்மா வந்தே தீரும்! கர்மா வந்தால் அங்கு இறப்பும் பிறப்பும் வந்தே தீரும்!!



## 2

ஏன் இங்கு ஸத்குரு தமக்கு ஒருவரை வாரிசாக கொண்டு
வரவில்லையெனில் அங்கு ஸத்குரு அவனை தனியே விட்டுச்
செல்கிறார். தம் (சிஷ்யன்) அன்பன் துறவியாகவோ குடும்பி
யாகவோ இருந்தாலும் அவனை (ஞானப்) பழம் ஆக்கி விட்டுத்
தான் அவர் செல்லமுடியும்.
(இங்கு துறவி யென்பதும் குடும்பி என்பதும் வார்த்தைதானே!)
குருவோ! அன்பரோ! பிராரப்த காலம் முன்பின் முடியலாம்
ஆனால் அனுபவஞானம் உடனே சாத்தியம்!
அதனால் தான் ஓர் ஸத்குருவை ஏணி என்றே
படகு என்றே சொன்னேன்!
ஓர் ஸத்குரு காலம் இருக்கும் போதே அந்த மெய் அன்
பன் பூரணத்வம் பெற்றுவிடுகிறான்!
அன்பன் அதாவது ஸத்சிஷ்யன் பரிபூரணத்வம்
பெற்றதை அவர் (ஸத்குரு) ஒருவரே அறிவார்!
இதை எப்படி அனுபவத்தில் உணரலாம் என்றால்
அந்த ஸத்சிஷ்யனுக்கு பின் பாடம், படிப்பு, முயற்சி,
பயிற்சி எதுவும் இராது! அனுபவத்தில் எந்த
கலக்கமும், பதட்டமும் (படபடப்பு) இராது. காலத்
திலும் ஸ்வய அனுபவத்திலும் பயம் இராது. இதில்
ஓர் முக்கியம் என்னவென்றால்.

இந்த ஸத்குரு தம்மை (பரத்தை) (காலத்தையல்ல)
**"முழுமையாக நம்பியவர்களை"**!!!
நிர்க்கதியாக விட்டுச் செல்லமாட்டார். இதன்
தன்மை என்னவென்றால் இந்த உத்தம சிஷ்யனின்
நம்பிக்கையே அவனுக்கு பரிபூரணத்வத்தை
கொடுக்கும். இங்கு இன்னொரு முக்கியம் என்னவென்றால்



உ

"இங்கு ஒருவர் இருவரல்ல நம்பும் பலரை
யும் பரிபூரணத்துவம் ஆக்க முடியும் இவரால்"

இதைத் தான்
வேதம் சொன்னது :— "நம்பினோர் கெடுவதில்லை"!!

இந்த நம்பினோர் கெடுவதில்லை யென்ற ஸத்ய வாசகம்
பக்திக்கும் பொருந்தும்;
கர்மாவுக்கும் பொருந்தும்; பக்திக்கும் பொருந்தும்! அனைத்து
ஸ்திர வைராக்யத்திற்கும் பொருந்தும் (அனைத்து வித்தையும் ஞானமே)
வித்தைகளுக்கும் பொருந்தும்
ஆனால் இந்த வாக்கியம்
ஆத்மஞானம் ஒன்றையே குறிப்பிடுவதாக
ஸ்ரீ மஹான்களின் அனுபவம்

காரணம்
மற்றும் அனைத்தும் வல்லமைகளை கொடுத்தும்,
ஆற்றல்களை கொடுத்தும், காட்சிகளை கொடுத்தும்,
ஓர் சுவையைக் கொடுத்தும், பற்பல சக்திகளைக்
கொடுத்தும் "அவை நிலைப்பதில்லை"!!

இங்கு தோற்றம், இருப்பு, மறைவு உண்டு. ஆனால்
இந்த ஆத்மஞானம் ஒன்றே தோற்றம், இருப்பு,
மறைவு இல்லை சுவையும் இல்லை!

"இதற்கு நம்பிக்கை ஒன்றே ஆதாரம்".

மேலே சொன்ன ஆற்றல் மிக்க சக்திகளை இல்லை, இல்லை,
இல்லை, என தள்ளுவதற்கு வைராக்கியமும்; இந்த
"ஆத்ம சக்தியை" உண்டு, உண்டு, உண்டு யென்
று கொள்வதற்கு நம்பிக்கையும் வேண்டும்.



உ

இங்கு இந்த ஸத்குருவின் அனுபவ பாடம் விரிவடை
யாமல் சுருக்கி (சூர்க்கத் தெரிந்த மருந்து என்றபடி)
"அது நீ, நீயே அது" என்பதற்கு மட்டும் சில
திருஷ்டாந்த தாஷ்டாந்தங்களை உதாரணமாகவும் சிறுசிறு
கதை ரூபமாகவும் விளக்குவாரேயன்றி சக்திகளுக்கும்
வல்லமைகளுக்கும், காட்சிகளுக்கும் உள்ளே செல்லமாட்
டார்! ஆகவே இவர் ஸ்வய அனுபவ போதனைகளை
கேட்பவரல்ல "உள்ளே உணர்பவர்கள்"
எவராயினும் அவர்களுக்கு பரிபூரணத்வம் உண்டு
அதாவது ஜீவன்முக்தி உண்டு என பிரமாணமாகச்
சொல்கிறேன். ஆகவே தான் பலர் எனக் குறிப்
பிட்டோம். "குரு ஆகமாட்டார்கள்"
இப்பலரும் "அது ஆவர்" இது உறுதி

தனக்குப் பின் அந்த இடத்தின் பிரதிநிதியாகவோ
அடுத்த வாரிசாகவோ ஒருவரை உருவாக்குதல் அது
ஆத்ம வித்தை அல்ல! உலக வித்தை; தெய்வ வித்தை!
இங்கு ஓர் உண்மை என்னவென்றால்?
இங்கு ஜாதி, மதம், மொழி சிறியவர், பெரியவர், கற்றவன்
கல்லாதவன், ஆண், பெண், பிரம்மச்சாரி, சந்நியாசி என்று
"பேதம் கிடையாது"
இங்கு பிரம்மச்சாரிகளோ, சந்நியாசிகளோ,
இல்லற வாசிகளோ, அந்த உத்தம குருவை
அண்டியவர்கள் "உத்தமரே" (முமுட்சுவே)
அவர் இது பிரமாண உண்மையாகும்!



## ௨

இவர்கள் உலகியல், தெய்வீக இயல், சக்தி, சித்துக்களின் "குண தோஷங்களை" பொருந்தாமல் அதில் வைராக்யமாகவும், ஸ்ரீ சத்குரு வேதாந்த வாக்யங்களில் பரிபூரண நம்பிக்கை (தன் தாத்பர்யம் சரணாகதி) உடையவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் சிஷ்யர்கள் அல்ல!

இவர்கள் மெய் அன்பர்கள்!!

"சிஷ்யர்கள் என்றால் பாடம் கேட்பவர்கள்!
அன்பர்கள் என்றால் அனுபூதிமான்கள்!!"

குழந்தைகளே! ஸத்குரு என்பவர் தாம் நடை,
1 உடை, பாவனையால் வாழ்ந்து காட்டலாமேயன்றி நம் வாழ்க்கையை போதனை முறையில் பாடம் நடத்தக் கூடாது.

௨ ஓர் ஸத்குருதேவரிடம் எந்த "குண தோஷமும்" இருக்கவாகாது!

௩ ஓர் ஸத்குருநாதருடைய தம் அன்பர்களிடம் கண்டிப்போ தண்டிப்போ இருக்கவாகாது!

௪ ஓர் ஸத்குருதேவர் எந்த குற்றம் குறை தம் அன்பர்களிடம் கண்டாலும், கேட்டாலும், தான் உணர்ந்தாலும் அதை தானே ஏற்றுக்கொள்ள வேண்டும்!

௫ ஓர் ஸத்குருதேவரிடம் காம காஞ்சனம் ஆசை (பெண், பொன்) இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது!

௬ ஓர் ஸத்குரு தேவருக்கு ஆஸ்ரம பணியோ, ஆஸ்ரம தேவைகளோ தோன்றாது. அவர் பணியெல்லாம் ஆன்மப் பணியே! அதாவது தாம் ஆன்மநலம் பெற்று



உ

அந்த ஆன்மீக வாசனையினால் (பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பது போல்) அன்பர்களை தம் காந்தத்தினால் நலம் பெறச் செய்வார்!

7 ஓர் ஸத்குரு தேவர் தம் மடத்திற்கு அதிபதியாகவோ பீடத்திற்கு அதிபதியாக இருக்கமாட்டார். தன் அன்பர்களையும் அப்படி அதிபதிகளாக்கவும் மாட்டார்.

8 ஓர் ஸத்குரு தேவர் சந்நிதியில் பொருளாளர், காரியஸ்தன் என்ற எந்த பதவிகளையும் எவரும் ஏற்கமுடியாது அனைவரும் மெய்யன்பர்களே!

9 ஓர் ஸத்குரு தேவருக்கு "இவனை (எவனையும்) உயர்த்த" வேண்டுமென்ற பாரபட்ச தோஷம் இருக்காது இருக்கவும் கூடாது!

10 ஓர் ஸத்குரு நாதர் சுயானுபவத்தில் நாம் குருவர்கள் சிஷ்யர்கள் என்ற பேத உணர்வு இருக்காது இருக்கவும் கூடாது. அனைவரும் "காணாத அந்த ஒன்றே" என்ற அபேத திருஷ்டி நிலவ வேண்டும்.

11 ஓர் ஸத்குரு தேவர் தம் சிஷ்யர்களில் எவரையாவது ஒருவனை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் வந்தாலே அவர் மந்தப்படுவார். அவர் அது ஆக முடியாது!

12 ஓர் ஸத்குரு தேவர் தம் சிஷ்யர்களை வழி நடத்தும் போது "சினந்து" எந்த வார்த்தையும் சொல்லாமல் "சிரித்து" அனைத்தையும் நடத்த முடியும்.

13 ஓர் ஸத்குரு தேவர் தம் நாவடக்கத்தாலேயே அன்பர்களை அடக்கி விடுவார். அவர் வார்த்தைகளை கொட்டி அவர்களை அடக்குவதில்லை.

14 ஓர் ஸத்குரு தேவர் காலத்திற்கு பின் பிறிதொருவரை நியமிப்பதும் இல்லை. தாம் வந்து இருந்து இப்படி கற்றுத்தந்தார் என "எந்த தடயமும்" விட்டுச் செல்வதில்லை! ஆனால் அவரை உணர்ந்த அனுபவசாலிகளும் "அந்த ஒன்றிலேயே ஒன்றி" மௌனமாகவே ஆகி விடுவர்!



உ

15 ஓர் ஸத்குருநாதர் (கரண) ஒழுக்கத்தின் அடிப்படையிலேயே அன்பர்களை கொண்டு சென்று அந்த கரணங்களையும் ஓர் காரணத்தால் முடித்து அந்த காரணத்தையும் தாமாக்கி கொண்டு தன்னை அறித்து அன்பர்களை அது ஆக்குவார்!

16 ஓர் ஸத்குரு நாதர் தமக்கு முன் வாழ்ந்த ஸ்ரீ மஹான்களின் ஸ்வய அனுபவ கருத்துக்களைமட்டுமே ஏற்றுக் கொண்டு சாஸ்திர வாஸனைகளை கொஞ்சம் கொஞ்சமாக விலக்கி மெய்அன்பர்களுக்கு அதை தம் ஸ்வய அனுபவமாக்கி "உணர்த்தி" அதை "சொல்லாமல்" அதைமட்டுமே (பரப்) **"ப்பிரத்யக்ஷானுபூதி"** ஆக்கமுடியும்!

17 ஓர் ஸத்குருநாதர் கர்மாவை நிஷ்காமியமாக்கி, பக்தியை உள்ள உணர்வாக்கி, வைராக்கியத்தை ஸ்திரப்படுத்தி, ஆத்ம ஞானத்தை ஸ்வய அனுபவ நிலையாக்கி **"ஸ்வயஞானானுபூதியை"** (தம் அன்பனை) தாமாக்குவார்!!

18 ஸ்ரீ சத்குருதேவரின் ஓர் உண்மை என்னவென்றால் அவர் அன்பர்களை பரண் (பரம்) ஏறச் செய்யும் ஓர் ஏணியாக தம்மை ஆக்கிக் கொள்வார். இன்னொரு நிலையில் அன்பர்களை கரையேற்றும் ஓர் ஓடமாக தம்மை ஆக்கிக் கொள்வார்

"ஏணி பரண் ஏறாது; ஓடம் கரை ஏறாது"!!!

அதாவது

அன்பர்களின் திருவடியின் கீழ் இருந்து கொண்டு அவர்கள் அனுபவிக்கும் பிரம்மானந்த நிலையை தாமும் அவர்கள் மூலமாக அனுபவித்துக் கொண்டு தாம் **பரப் ப்ரத்யக்ஷானந்தானுபவ**மயமாகவே இருப்பார்.



உ

குழந்தைகளே!

ஜடசொரூபத்தை அசைப்பது அதாவது உண்மையைப் போல் தோற்றப் பண்ணுவது மாயை.

அதாவது!

ஜடம், கடம், படம் (உலகபொருள்கள், உயிரினங்களின் தாவரம், மரம், செடி, கொடி, புல், பூண்டு) ஆகியவைகளை உண்மையில் இருப்பதைப் போல் காட்டுவது மாயை (அது இறைவன்).

இறைவனின் நிழலே மாயை. இந்த மாயை மலினமாகும் (கெட்டுப் போகும்) போது அதன் பெயர் மனம்.

இறைவன் மனமில்லாதவன் ஆனால் மாயையை உடையவன். ஜீவன் மனதை உடையவன் ஆகையால் மாயையில் மயங்கினான்.

மாயையின் சாயலே (நிழலே) மனம்!

மாயையில் மனம் லயித்தால் அது மலினமாயை! மாயையிலிருந்து மனம் விலகினால் அது சுத்தமாயை!

இறைவன் மனமில்லாத (கற்பனை இல்லாத) மாயையுடன் சம்பந்தம் கொண்டதனால் அந்த சுத்தமாயை அவனை ஒன்றும் செய்வதில்லை. ஆனால் ஜீவன் மனதை கொண்டு மாயையிடம் சம்பந்தம் கொண்டதனால் அதாவது ஜடசொரூபத்தையே அதாவது அவித்யா சொரூபத்தையே மனம் (கற்பனை) கொண்டு காண்பதனால் மாயையின் அசைவானது இந்த ஜீவனை கானலை ஜலமாகவும் (உலகம்) சிப்பியில் வெள்ளியையும் (பொன் பொருள்) கயிற்றை சர்ப்பமாகவும் (பெண் ஆசை) கட்டையில் கள்வனையும் (நாமரூப கோடானுகோடி மயக்கம்) மேகக் கூட்டங்களை கந்தர்வ நகரம் போலும் (அண்டரண்ட பிரம்மாண்டங்கள்) ஆக மதிக்கச் செய்வதால் இந்த ஜீவன்

"கற்பனையையும் (மனதையும்) விட முடியாமல் அசைவுகளையும் (மாயையையும்) மறக்க முடியாமல்" ஆப்பு அசைத்த குரங்கு போல் ஜக இன்மையில் மாட்டிக் கொண்டான்.



உ

இந்த உண்மைகளை தெரிந்து தெளிந்து உண்மையை உணர்ந்து
ஜகத்தை ஜடமாகவே தள்ளி, மலின மாயையின்
மனதைக் கெடுத்து அதை சுத்தமாயையாக்கி

மனதில் உதித்த ஜகத்தையும்;
மாயையில் உதித்த ஈசனையும்,

காலாதீத அந்த ஒன்றின் பிரதிபிம்பமே என உன்
மெய்யறிவால் உணர்ந்து பொய்மை விட்டு மெய்மை
பற்றினால் "அது நீயே" ஆகுவாய்!

"பொய்மை பொய்யென்றறியும் போதகத்திற்கு
(உன்) மெய்யருளேயன்றோ விளம்பாய் பராபரமே" என்றபடி
யும், அவன் அருளால் அவன் தாள் வணங்கி
அந்த ஒன்றின் கிருபையினால் அது நீ என ஆகுக
என ஆசி கூறுகிறோம்!

ஆனால் இந்த கலி தோஷமானது "பொய்மை மெய்யாக
காட்டிவிடும்! மெய்மை தோற்றமலே மறைத்துவிடும்"
உங்கள் ஆத்ம சாதனையில் உலகம், உடல், பொருள் பொய்!
என்றும் தெய்வத்தை மாயா சொரூபமென்றும் எழுதலாம்,
ஒருவர்க்குச் சொல்லி விடலாம்
"ஆனால் தாம் சுயானுபவம் பெறுவது மகா கடினம்",
இந்த கலியில் இதற்கு ஒரே வழி
அனைத்தையும் "பொறுமையாக" ஏற்றல்!
அப்படி ஏற்பதற்கு

பகவானின் மாயையே பொய்மையை (ஜடத்தை, அவித்தையை) இருப்பு
டைய மெய்மைபோல் காட்டியது ஆகவே இந்த பொய்யான ஜகத்
தையும் உலக பொருள்களையும் அது எதிலிருந்து தோன்றியதோ
அந்த மாயையிடம் விட்டுவிட்டு "சும்மா இரு"
இதை

"**சொல்லற சும்மா இரு**" என்றான் எம் இறைவன்!



உ

அன்புக் குழந்தைகளே!

சரீரம் என்றுவே ஜீரணிக்கப் பட்டது அதாவது கெட்டுப் போவது எனப் பொருள் படும்! நல்வினை தீவினையால் உருவாக்கப்பட்டதே தூலம்! அவைகளை (பிராரப்தத்தை) அனுபவியாமல் தூலம் அழியாது. அவைகளை அனுபவித்து முடித்தால் தூலம் நில்லாது இது உறுதி. இதனைத் தான் ஸ்ரீ மஹான்கள் சொன்னார்கள்

"வினை போகமே ஓர் தூலம் கண்டாய்!
வினைதான் ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது கண்டாய்!"

எனவும் சொன்னார்கள் மேலும்?

"கல்லா இரும்பா உன் உடம்பு கலியுகமட்டும்
அழியாத வரமுண்டோ சொல்லு?
புல்லாகிலும் உதவி உண்டு — அதை
சற்றும் பாராதிருந்திட பண்ணு உபாயம்"!

என்றும் மேலும்?

உப்புமண்ணும் ஓட்டை ஓங்கில் ஒட்டிவைத்த கூடடா!
உளுத்த நரம்பும் புழுத்த தோலும் இழுத்துக் கட்டின கூடடா!!
குப்பை இறைமூளைத்தது போல் கூடு கட்டின கூடடா!
புழுத்த தோலும் வழுத்த நரம்பும் இழுத்துக் கட்டின கூடடா!!

என்றும் மேலும்?

ஊத்தைக் குழியிலே மண்ணை எடுத்து,
உதிரப் புனலிலே உண்டை சேர்த்து,
வாய்த்த குயவனார் பண்ணும் பாண்டம்,
ஈசன் நிலை அறியார்க்கு இந்த பாண்டம்,
எறிமண்ணிற்கு இரையாகுமென்று பாம்பே!

என்றபடியும் இந்த மண் சரீரத்தை மஹான்கள் இகழ்ந்து துறைத்தனர். ஆனாலும் இந்த சரீரத்திற்குள்ளிருந்து தான்



உ

"உண்மையை உணர முடியும்" ஆகவே இந்த
சரீரத்தை போற்றிப் புகழ வேண்டாம்.
"உண்மையை உணரும் வரை பாதுகாக்க வேண்டும்."
பாதுகாக்க வேண்டுமெனச் சொன்னது உபசார வசனமே.
அதாவது சரீரத்தில்
"கவனம் வேண்டும்; கடினம் வேண்டாம்"
பாசம் பற்று வேண்டாம்; பாடம் அனுபவம் வேண்டும்!
"நெற் தொண்டு போமாவும் நில்லாய் நெருஞ் சுவரே"
என்றபடி இந்த உடல் வீட்டு சுவரை புதுப்பிக்க வேண்டாம்.
உண்மையை உணரும் சிறிது காலம் வீட்டு சுவருக்கு
காரையைபூசி வெள்ளை அடிப்பது போன்று இந்த உடம்பை
சற்று பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பார்கள். ஆகவே
சாதனையாளர்கள் இந்த உடம்பை போடுவதாத்தல் பெரும் சிரமம்
என்பார்கள். இந்த உடம்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதே இந்த
வஞ்சனையான மனம் தான்! இந்த மனத்தைக் கொண்டே
இந்த உடல் இறைவனைக் கைபற்றுமையாக்கிக் கொண்டால் அதன்
பாரம் இந்த மனதிற்குத்! தோற்றது! ஏன் என்றால் இதன்
வரவு செலவு (புண்ணிய பாவம்) அனைத்தையும் அவன் பார்த்துக்
கொள்கிறான் அதாவது
"வினையைப் பார்த்து, மனதை கொல்கிறான்"
எனப் பொருள்படும். ஆகவே இதை "விதிகொணும் உடம்பை"
என்றார்கள் இது விதிக்கு உட்பட்டதே. அதாவது பிராப்தத்
திற்கு உட்பட்டதே. அதாவது புண்ணியபாவத் திற்குட்பட
டதே இந்த விதிக்கு திரிகர்த்தாக்களும் விலக்கல்ல அவர்க
ளும் விதிக்குட்பட்டவர்களென்று
"அழகாக நடித்துக் காட்டி இருக்கிறார்கள்."
அவர்கள் நடிப்பதை நாங்களோ விதிக்குட்படும் போது
நீங்களென்ன விதிவிலக்கா எனக் கேட்பது போலிருக்கும்
அவர்கள் நடிப்பு!



உ

எப்படி என்றால்?

நான்முகனுக்கும் ஆரம்பத்தில் ஐந்து தலைகள்!
சிவபெருமானுக்கும் என்றென்றும் ஐந்து தலைகள்!!
ஓர் காரணத்திற்காக சிவபெருமான் நான்முகனின்
தலை ஒன்றை தம் கரங்களால் கிள்ளி விடுகிறார். அந்த
சிரம் சிவபெருமான் கரங்களில் ஒட்டிக் கொள்கிறதாம்.
அந்த பிரம்மனின் தலையை சிவபெருமானால் கீழே போட்டுவிட்டு
அமைதியாக இருக்கமுடியவில்லையாம். பிரம்மனே சிருஷ்டி
கர்த்தா அவரால் தாம் இழந்த தலையை திரும்ப சிருஷ்டி செய்து கொள்ள
முடியவில்லையாம்.

“கர்த்தாக்களின் கதியே (விதி) இப்படி
என்றால் மானிடரின் நிலை என்ன??”

இதில் என்ன உணர்கிறோம் என்றால் மண், மலை, மரம், செடி, கொடி
புல், பூண்டு ஆகியவைகள் இயற்கையின் அம்சம்!
பொன், பொருள், பாத்திரபண்ட பதார்த்தம், கட்டிடமாகிய
வீடு செயற்கையின் அம்சம்!
தாவரமாகிய அனைத்து ஜீவ சரீரங்கள் (குடம் அதாவது பாத்
திரம்) புண்ணியபாப வினையின் அம்சம்!

இப்போது!

இந்தபுண்ணியபாப வினைக்கூடுகள் இயற்கையை செயற்கையாக்கி
அதைதம் புண்ணியபாப வினைக்கேற்ப
அசைத்து சுவைப்பதைப் போல் நடிக்கின்றன!
இவை உண்மையில் இல்லவே இல்லை!
இந்தவினைக்கூடுகள் ஜடமாகவும், மடமாகவும் அறிவற்ற
தாகவும் இருப்பதால் தானே இயங்கமுடியாது. ஆகவே?
இறைவனின் சுத்த மாயை மலிணப்பட்டு மலின
மாயையாகி அதாவது அதுவே “மனமாகி”
இந்தவினைக்கூடுகளை விதைதாச்சாரப்படி பாரபட்ச



உ

தோஷம் இல்லாமல் வெகு ஒழுங்காக நடத்தி வருகிறது. ஆனால் "மனம் செயல்படும் போது ஒழுங்காகவும், அமைதியாகவும், மிகுந்த பொறுமையாகவும் செயல்படுகிறது"!!

இங்கு

"குணம் சம்பந்தம் கொள்ளும் போது விரோத, விபரீத, சஞ்சல பாவனை உருவாகிறது"!

இந்த விரோத, விபரீத, சஞ்சல பாவனை குணத்தை விடுவது என்றால் இவற்றின் மூலகாரணமாகிய இறைவனிடம் விடுவதல்லாது வேறு மார்க்கம் இல்லவே இல்லை!

ஆகவே உங்கள் வாழ்க்கையை "கடமை" என முக்யத்வம் கொடுக்க வேண்டாம் "நடிப்பு" எனபாவனையை மாற்றி பழகுங்கள்!

கடமையென்றால் அதை செய்துதான் தீர வேண்டும் என்ற "அழுத்தம்" மனதிற்கு உண்டாகும்.

நடிப்பு என்றால் நாம் வேஷம் போட்டிருக்கிறோம் ஆகவே குறைக்க வேண்டும் என "உணர்ந்த நிலை"யில் அனாயசமாக நடிக்க முடியும்!

உதாரணமாக கவனி

இந்த அண்ட, நண்ட, பிண்ட, பிரம்மாண்டங்களையும் கண் மூடி திறக்கும் நேரத்திற்குள் சிருஷ்டி செய்யும் கர்த்தா பிரம்மன் தான் இழந்த ஓர் தலையை சிருஷ்டிக்க முடியவில்லை!

அகில புவனங்களையும் ஓர் நொடியில் அஹங்காரத்தால் அழிக்கும் ருத்ரன் தம் கையில் ஒட்டிக் கொண்ட பிரம்மன் தலையை கீழே போடவோ அதை அழிக்கவோ முடியவில்லை!

இதன் ரகஸ்ய நடிப்பாவது

நான்கு திசைகளையும் பார்த்து சிருஷ்டிக்கும் நான்கு தலைகளும் மேல் நோக்கி பார்க்கும் ஓர் தலையும் ஆக ஐந்து தலைகளை உடையவனாக நாம் இருக்கிறோம் என்ற அஹங்கார குண தோஷம் உடையதாக காட்டி நடித்து இந்த அஹங்காரம் உங்களுக்கு வேண்டாம் என நமக்காக நடித்துக் காட்டிய பாடம்



உ

தம் தலையை இழந்தான் பிரம்மன். இது நடிப்பே தவிர உண்மை இல்லை
இறைவனின் ஒவ்வொரு நடிப்பும், மஹான்களின் ஒவ்வொரு நடிப்பும்
சாதனையாளர்களாகிய நமக்கு அறிவுறுத்தும் பாடமாகும்!

"அதை குறையாகவும் குற்றமாகவும் நாம் கருதக் கூடாது"!!!

இதைப்போலவே ருத்ரனாகிய சிவ பெருமானும் நமக்கும் ஐந்து தலைகள் பிரம்மனுக்கும் ஐந்து தலைகளா? இது கூடாது பிரம்மன் தலைகளில் ஒன்றை எடுத்துவிட்டால் தானே நமக்கும் அவனுக்கும் வித்யாசமும் தெரியும் என பேத உணர்வால் (ஒன்றுபட்ட உணர்வு இல்லாத நிலையில்) (அந்த பேதத்தை) நான் செய்கிறேன் என்ற அஹந்தையால் அந்த காரியத்தை "குறைதோஷ சம்பந்தத்தோடு" நடிப்பாக நடித்துக் காட்டினான் சிவ பெருமான் இது நடிப்பே தவிர உண்மை இல்லை!

"அதை குறையாகவும் குற்றமாகவும் நாம் கருதக் கூடாது"!!!

இதையே விஷ்ணுவும் திறம்பட நடித்துக் காட்டினான். இதில் ஒர் நீதியையும் போதிக்கிறான் அந்த விஷ்ணு! ஸ்ரீ பாகவத தர்மத்தில் என்ன கூறுகிறது என்றால்

"ஸ்ரீ பகவான் திருமுடியில் பக்தன் திருவடி படலாம் என்றும், பக்தன் திருமுடியில் பகவான் பாதம் படக் கூடாது"

என்றும்

"சத்குரு திருவடி சத்சிஷ்யன் திருமுடியில் படலாம் என்றும் சொல்கிறது"

ஆகவே ஸ்ரீ பரமாத்மா தினம் செய்யும் பூஜையானது ஸ்ரீ அடியார்கள் திருவடியின் தூளியாகும். தினமும் ஸ்ரீ பகவான் அந்த திருவடி தூளியை தம் சிரம் மேல் தாங்கிக் கொள்கிறான்.

இது பாகவத தர்மம்.



உ

குழந்தைகளே!

ஓர் கதையைச் சொல்லி அதன் காரணத்தினால்
"தெய்வீக தர்மத்தை" உணர்த்துகிறோம் உணர்வீர்!

இதுகதை

ஓர் சமயம் மஹாபலிச் சக்ரவர்த்தி (இவன் பக்தன் பிரகலா
தனின் பேரன்) தாம் இந்திர பதவியை அடைய என்ன செய்ய வேண்டு
மென தம் குரு சுக்ராச்சாரியரிடம் கேட்க அவரும் 100 அஸ்வ
மேத யாகம் செய்தால் அடையலாம் என சொல்ல இந்த பலி
யும் 99 அஸ்வமேத யாகம் தம் குரு இருமையால் செய்து
முடித்து தான தர்மங்களும் எந்த குறைவின்றி செய்து முடிந்து
100 வது யாகம் செய்தான். அதிலும் அந்தணர்களுக்கு கோதானம்,
சொர்ணதானம், வஸ்திர தானம், முதலியவைகளை குறைவின்றி செய்து
யாகம் முற்றுப் பெறும் போது ஸ்ரீ மஹாவிஷ்ணு தேவர்கள் நன்மைக்
காக ஓர் மூன்றடி உயரமுள்ள குள்ளமாக (ஸ்ரீ வாமனராக)
தோன்றி மூன்றடி மண் (பூமி) யாசகமாக கேட்டு

(குழந்தைகளே! இங்கும் விரோதம், விபரீதம், சஞ்சலம்,
பாரபக்ஷமாகிய பேதஉணர்வு தோன்றுகிறது. இந்த பேதஉணர்வை
காட்டியின் "தர்மஸத்ய ஸங்கல்பனாய்" அதை
நிவர்த்தித்துக் கொள்கிறான்.)

பின் திரிவிக்ரமனாய் தோன்றி ஆகாயத்தையும் பூமியையும்
இரண்டு அடிகளால் அளந்து ஒரு அடிக்காக தம்
"பக்தனை பலியின் சிரசில் பாதம் வைக்கிறான்"
பாதம் வைக்கும் போது ஸ்ரீ ஹரி சொன்ன வாசகம் :—

ஹே எம் மெய்யான அன்பனே பலி! யாம் இப்போது ஓர் செய்ய
தகாத காரியத்தை தேவர்கள் நிமித்தமாகச் செய்கிறோம்.
இதில் வஞ்சகம் உள்ளது, சூழ்ச்சி உள்ளது,
பொய் உள்ளது, களவு உள்ளது!!!



உ

வஞ்சகம் :- தேவர்களை ஆதரித்து உன்னை உபாசிக்கிறோம் அதாவது நம் ஒரு கண்ணில் வெண்ணையையும், மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் வைக்கிறோம். ஒருவன் வாழ மற்றொருவனை அழிக்கிறோம் இது வஞ்சகம்.

சூழ்ச்சி :- ஒரு குள்ளமான சிறிய உருவத்தில் இருந்து உன்னிடம் மூன்றடி மண் கேட்டோம். ஆனால் மண் எடுத்ததோ விராட்ரூபத்தில் இதில் நீ அறியாமலேயே உன்னைக் கெடுக்கிறோம் இது சூழ்ச்சியாகும்.

பொய் :- உன்னிடம் யாம் யாசகமாக கேட்கும் போது சிறிய திருவடி ஆனால் யாம் அளக்கும் போது பெரிய திருவடி அதாவது உன்னிடம் பேசியது ஒன்று யாம் செய்வது ஒன்று இங்கு எம் வாக்கை காப்பாற்றாமல் பொய் பேசுகிறோம்.

களவு :- மற்றவர்கள் எல்லாம் பொன்னும் மணியும் மண்ணும் கேட்டு "அளவோடு" வாங்கினார்கள். ஆனால் யாம் கேட்டது சிறிய மண் யாம் எடுத்துக் கொண்டதோ பெரிய அளவில் மண். இங்கு களவு செய்து விட்டோம்!

ஆகவே!

எம் உத்தம பக்தா! மேலே கூறிய நான்கு செயலும் ஓர் அறியாமையின் ஜீவன் செய்யும் நியாயமாகும் ஆனால் யாமோ ஓர் அறிவின் சொரூபமாக இருப்பவன் இப்படி தகாத காரியத்தை செய்கிறோம் ஆனால்?

"யாம் தெரிந்தே உணர்ந்தே இதைச் செய்கிறோம்"

**"யாம் போட்ட வேஷத்திற்கு நடிக்கிறோம்"**

இது எம் சாதனையாளர்களுக்கு ஓர் பாடமாகவும் பயிற்சியாகவும் அமையும். இச்செய்கைக்காக யாம் அவதார சொரூபியாக இருந்தாலும் இந்த ஜன்மாவிலும், அடுத்த ஸ்ரீராம ஜனனத்திலும், அடுத்த ஸ்ரீகிருஷ்ண ஜனனத்திலும் "இதன் பாபம் எத்தகையது என எடுத்துக் காட்டுவோம்" என்றான் ஸ்ரீ ஹரி!



உ

இதில் ஓர் ரகஸ்யம் என்னவென்றால்!

ஸ்ரீ பகவானிடம் நான்கு துர்க்குணங்கள் வந்ததாக கூறினோம். இதற்கு முன்பே அந்த பக்தனிடம் அந்த நான்கு துர்க்குணங்களும் இரண்டு கடினமான குணங்களும் சம்பந்தம் கொண்டிருந்தன. அதாவது "பொறாமையும்" பொறுக்க இயலாமையும், "பேராசையும்" தவிர்க்க முடியாத பெரிய ஆசையையும் உடையவனாக இருந்தான் அந்த பலிச்சக்ரவர்த்தி!

பொறாமை:- தேவர்கள் சோமபானப் பிரியர்களாக இருக்கிறார்களே
அவர்கள் ஸ்திரி லோலப் பிரியர்களாக இருக்கிறார்களே!!
அவர்கள் நம்மை ஆளப்பட்டவர்களாக இருக்கிறார்களே!!!
அவர்கள் செல்வச் செருக்கோடு இருக்கிறார்களே!!!!
நீயும் தான் மதுபானப் பிரியனாக இருக்கிறாயே!
நீயும் தான் ஸ்திரீ லோலப் பிரியனாக இருக்கிறாயே!!
நீயும் தான் பிறரைகளை ஆள்கின்றாயே!!!
நீயும் தான் பொக்கிஷத்தோடு இருக்கின்றாயே!!!!

பேராசை:- நாமும் இந்திரனையும் அவன் பதவியையும் ஆளவேண்டும்!
நாமும் தேவமாதர்களுடன் கிரீடிக்க வேண்டும்!!
நாமும் மூவுலகையும் கட்டி ஆளவேண்டும்!!!
நமக்கு மேல் செல்வந்தன் மூவுலகிலும் இருக்கக்கூடாது!!!!

குழந்தைகளே!

இந்த இரண்டு கடின குணங்களிலும் அந்த நான்கு குணங்கள் மட்டுமல்ல ஏனைய குணங்களும் மறைந்திருந்தன. ஆகவே இந்த கடின குணங்களிலிருந்து அனைத்தையும் அழிப்பதற்கே பகவான் தாமே நான்கு குணங்களை ஸ்வீகரித்துக் கொண்டான். ஸ்வீகாரம் என்றாலே தமக்கு உடைமையாக்குதல் தானே? அந்த உடைமையை ஏற்றுக் கொண்டதால் மூன்று ஜனனம் எடுத்து தம்மைத் தாமே வருத்திக் கொண்டான் ஸ்ரீ ஹரி!

ஏன் பகவான் குணங்களை முதலில் சொல்லி பின் அதன் பரிஹாரமாக பக்தனின் குணங்களை சொல்கிறோம் என்றால் "பக்தனின் குணங்களுக்கு ஸ்ரீ பகவானின் குணங்களே பரிஹாரம்" இங்கு ஒன்று மாற்றிச் சொல்கிறோம் என்றால்



"ஓர் உண்மை பக்தன் ஸ்ரீ பகவான் அம்சமும் பெறலாம்!"
ஸ்ரீ பகவான் பக்தன் அம்சமும் பெறமுடியாது!!
"ஓர் உண்மை பக்தன் ஸ்ரீ பகவான் தோற்றமும் பெற முடியாது!
"ஸ்ரீ பகவான் பக்தன் தோற்றமும் பெறமுடியும்"

அம்சம் வேறு, தோற்றம் வேறு, அம்சம் குணம்;
தோற்றம் நாமரூபம்!!

ஸ்ரீ ஹரி தம்மை தாமே வருத்திக் கொள்வதினால் நாம் அனுபவ பாடமும் பெறுகிறோம்! ஸ்ரீ பகவானே இப்படி ஏற்றுக் கொண்டிருந்தால் நாமும் அவன் நாமாவைச் சொல்லியே வலிய குறைகளிலிருந்து விடுபடமுடியும்! இது ஸத்யம்.

"நாமும் நடிக்கப் பழக வேண்டும்!
"திறம்பட நடிக்க வேண்டும்!!
"நடிப்பில் நான் எனது என மயங்க வேண்டாம்!"

குழந்தைகளே! ஓர் உண்மை என்னவென்றால்

**பக்தன்! பாகவதம்!! பகவான்!!!**

ஓர் பக்தன் பாகவத தர்மத்தினால் பகவான் ஆகிறான்!
ஸ்ரீ பகவத் நாமாவை உணர்வுடன் சொல்லி நாமும் நடிக்கலாம் அப்படி நடிக்கும்போது நாமும் ஸ்ரீ பாகவத தர்மத்தை கடைப்பிடிக்கிறோம் என உணர வேண்டும். இப்போது உங்களுக்கு ஓர் கேள்வி எழலாம்! உள் உணர்வோடு பகவன் நாமஸ்மரணை இருந்தால் தீய காரியம் செய்யலாமா? செய்ய முடியுமா? என கேட்டால் அவஸ்யம் தீய காரியம் செய்ய முடியாது அது இயல்பாகவே மாறிவிடும்! இது அனுபவ பயிற்சியாகும். ஆகவேதான் ராமன் உள்ள இடத்தில் காமன் இல்லையென்றும் காமன் உள்ள இடத்தில் ராமன் இல்லை என்றும் சொன்னார்கள் ஸ்ரீ மஹான்கள்.



உ

அனி ஸ்ரீ பகவான் அந்த ஓர் காரியத்திற்காக அதாவது
"பக்தனாகிய பலிச்சக்ரவர்த்தியின் சிரசில் தாம் பாதம் வைத்ததனால்"
அவனை பாதாள உலகத்திற்கு அனுப்பி வைத்தான் ஸ்ரீ ஹரி.
அங்கு அவன் ஆட்சி செய்யும் பரியந்தம் அவன் கோட்டை
"வாசல் காப்போனாக" அதாவது "துவாரபாலகனாக"
ஸ்ரீ ஹரி தம்மை அமைத்து வருத்திக் கொண்டான்.
இரண்டாவதாக ஸ்ரீ ராமாவதார காலத்தில் ஸ்ரீ ஹரி
வனத்தில் தம்பி லக்ஷ்மணனுடனும் பத்தினி சீதையுடனும்
அலையும் போது
"திருவடியில் பாதுகை இல்லாமல்"
வெறுமனே நடந்து கல்லிலும் முள்ளிலும் குத்தி ரணமாகும் பரியந்தம்
பாதசாரியாகவே நடந்து தம்மை வருத்திக் கொண்டான்.
மூன்றாவதாக ஸ்ரீ கண்ணனாக அவதரித்த காலத்தில் தம்
தூலத்தை விடும் நிமித்தம் ஓர் மரக்கிளையில் அமர்ந்து
தியானம் செய்யும் போது, அதே வலது திருவடி பாதம்
ஓர் வேடுவன் (அவன் வாலி) கண்களுக்கு ஓர் பறவையாக
தோன்ற, ஓர் பிராமணசாபத்தால் கிடைத்த இரும்பு துண்டு
பாணமாக அமைய, அதை அந்த வேடுவன் எடுத்து பறவை
யாக அமைந்த ஸ்ரீ பாதத்தில் பிரயோகிக்க
"அதை காரணமாகக் கொண்டு பூபாரம் நீக்கும்
நிமித்த காரியமாகக் கொண்ட தூலத்தை
விட்டான் ஸ்ரீ ஹரி"
இப்படி மூன்று ஜனனம் எடுத்து ஸ்ரீ பாகவத அபசாரத்தால்
தம்மை வருத்தி ஏற்றுக்கொண்டு ஸ்ரீ பாகவத தர்மத்தை
கடைப்பிடித்தான் எம் ஸ்ரீ பகவான்!



2

இதன் முழுமையான ரகஸ்யம் என்னவென்றால் வேடனின் தோஷமான பாணம் கண்ணனின் வலது பாதத்தில் பட்டு குருதி கொட்டுகிறது. அந்த நிலையில் கண்ணனின் தாவம் மரத்திலிருந்து கீழே ஓர் பள்ளத்தில் வீழ்கிறது. பள்ளத்தில் வீழ்ந்த கண்ணனால் எழ முடியவில்லை

இதை படிக்கும் அன்பர்களுக்காக கண்ணனின் நடிப்பை எழுதுகிறோம். இது

**நடிப்பில் உண்மை!**
**உண்மையில் இல்லை!!**

அன்புக் குழந்தைகளே!

ஸ்ரீ கண்ணன் குழியில் விழுந்து எழ முடியாமல் கத்துகிறான் கதறுகிறான். பஞ்சபாண்டவர்களும் அங்கு திரௌபதியுடன் வந்துவிடுகிறார்கள். மற்றும் அருகில் உள்ள கிராம ஜனங்களும் வந்துவிடுகிறார்கள். எல்லோரும் ஆச்சர்யமாக பார்க்கிறார்களே தவிர எந்த உதவியும் செய்யவில்லை!

(செய்யவில்லை என்று சொல்வதா? செய்ய முடியவில்லை என்று சொல்வதா?? அது ரகஸ்யம்)

கண்ணனின் கூக்குரலாவது :— ஏ தர்மா! உனக்காக எந்தெந்த நிலையில் எல்லாம் உபகாரம் பண்ணினோம்! உனக்கு ராஜ்யம் வேண்டும் என்பதற்காக எம் பாதம் தேய நடந்து ஐந்து முறை துரியோதனன் சபை சென்றோமே! உனக்காகவும் உன் சகோதரர்களுக்காகவும் அப்போதைக்கப்போது ஓடி ஓடி வந்து உபகாரம் புரிந்தோமே!

ஏ பீமசேனா! உனக்காக யாம் எத்தனை கஷ்டப்பட்டு உபகாரம் செய்திருக்கிறோம். போர்க்களத்தில் பகதத்தன் எறிந்த கதாயுதத்திலிருந்து உன்னை காப்பாற்ற எம் மார்பைக் காட்டி பகதத்தனை முடித்தோமே! ஜராசந்தனை நீ போரிட்டு களைப்படையும் போது அவன் மறுபிறகஸ்யம் அறிந்த யாம் ஓர் இலையை கிழித்து மாற்றி எறியும்படி உனக்கு சமிக்ஞை செய்ய நீ அவ்விதம் செய்து ஜராசந்தனை முடித்தாயே!

ஏ அர்ச்சுனா! உன் சகோதரர் நால்வரிலும் உனக்காகவே யாம் முக்யத்வம் கொடுத்தோமே. பாரதப் போரில் உனக்காக உன் கீழ் அமர்ந்து சாரத்யம் செய்தோமே. நீ விரும்பிய பெண்களை எல்லாம் அங்காங்கே உபகாரம் செய்து மணம் முடித்து வைத்தோமே. உலகில் யாருக்குமே கிடைக்காத பேறை உனக்கு கிடைக்கச் செய்தோமே அதாவது நரன் நீ என்றும் நாரணன் யாம் என்றும் உன்னை எம்மோடு இணைத்துக் கொண்டோமே. இன்று யாம் படும்



உ

அவஸ்தையைக் கண்டும் காணாதது போல் வேடிக்கை பார்க்கிறாயே? இது உனக்கு அழகா?

ஏ நகுல சகாதேவர்களே! உங்கள் வனவாசகாலங்களிலும் உங்கள் போர்க்காலங்களிலும் நீங்கள் எண்ணியதையும் சொன்னதையும் ஓர் ஏவலாள் போல் இருந்து பணிபுரிந்தோமே! ஏ சகாதேவா! உனக்காகவும் உன் சகோதரர்களுக்காகவும், உங்கள் போரின் வெற்றிக்காகவும் நாளை வரவேண்டிய அமாவாசையை இன்றே வரச் செய்து உனக்கு எத்தகைய உபகாரம் செய்துள்ளோம். சாஸ்திர பண்டிதனை உனக்கு கட்டுப்பட்டு எம்மை உனக்குள் ஆக்கிக் கொண்டோமே. எம் அவஸ்தையைக் கண்டும் ஏன் இப்படி ஒன்றும் தெரியாதவன் போல மௌனமாயிருக்கிறாய்?

ஏ பாஞ்சாலி அம்மா திரௌபதி! மூச்சுக்கு முன்னூறு தடவை அண்ணா அண்ணா என்றும் கண்ணா கண்ணா என்றும் அழைப்பாயே இன்று அந்த குரல் எங்கே போனது? துரியோதனன் சபையில் அன்று உன் மானம் காப்பதற்காகவே சாப்பிட்டுக் கொண்டிருந்த யாம் சாப்பாட்டை நிறுத்திவிட்டு ஓடோடி வந்தோமே அதை அறியாததா? உன் அவிழ்ந்த கூந்தல் முடிவதற்காகவே அன்று பாரதப்போர் நடத்திக் காண்பித்தோமே! உங்களுக்கு வெற்றியையும் வாங்கித் தந்தோமே! உன்னையும் உன் கணவன்மார்களையும் நாம் காக்க யாம் எடுத்துக் கொண்ட முயற்சிதான் எத்தனை? எத்தனை??

ஏ பாண்டவர்களே! அம்மா பாஞ்சாலி!! ஏன் இப்படி சிலை போல நிற்கிறீர்கள்? நமக்கு ஆயுள் எல்லாம் உபகாரம் செய்தவன் நிலை இப்படி ஆயிற்றே என ஒருவருக்காவது அன்பு, இரக்கம், பரிவு, பச்சாதாபம், கருணை, காருண்யம், தயை உண்டாகவில்லையா? யாம் எத்தனை வேதனையுடன் இந்த மரண அவஸ்தையுடன் இருக்கிறோம் இது உங்கள் கண்களில் படவில்லையா? ஒரு ஆறுதல் வார்த்தை சொல்லலாகாதா? எம்மை தேற்றக் கூடாதா? ஓடி ஓடி உழைத்த யாம் இப்படி உருக்குலைந்து போனோமே இது உங்கள் கண்களில் படவில்லையா? கொடிய அரக்கர்களையும் பலமிக்க அசுரர்களையும் ஓர் நொடிப்பொழுதில் சம்ஹாரித்த யாம் இப்படி ஓர் பாணத்தால் அடிபட்டு வீழ்ந்துவிட்டோமே! எம்மை இந்த குழியில் இருந்து மேலே கரையேற்றி விடலாகாதா? எவ்வளவு பலமிக்க யாம் என் கோவர்த்தன கிரியையே ஓர் சுண்டுவிரலால் தூக்கி குடை போல் பிடித்து ஆனிரைகளையும் கோபிய கோபாலர்களையும் ரக்ஷித்த யாம் இந்த தூக்கி கரையேற முடியவில்லையே! ஏ பாண்டவர்களே உங்கள் வனவாசகாலத்தில் ஓர் அசுரன் மலைப்பாம்பு பெரு உருவெடுத்து உங்களை விழுங்கி ஏப்பமிட அங்கு உங்கள் குரல் கேட்டு ஓடிவந்து அதை அழித்து உங்களை மரண அவஸ்தையிலிருந்து காத்த யாம் இன்று மரண அவஸ்தைப்படுவதைக் கண்டும் கல்லாய் நிற்கிறீர்களே இது முறையா?



## உ

இது தர்மமா? இது உங்களுக்குப் பொருந்துமா? என இன்னும் பற்பல விதங்களாக

பாசத் தோடும், பந்த உறவோடும்; பிரதிபலனை கருதும் கருத்தோடும், உறவு சுற்றமாக காணும் கருத்தோடும்.

**லௌகீக உணர்ச்சியோடு !!!**

எமதய்யன் கண்ணன் புலம்பினர்.

குழந்தைதனே! இந்த கண்ணன் கூற்றை நம் தர்மபுத்திரரைத் தவிர மற்றைய ஐவரும் (பாஞ்சாலி உட்பட) அவன் வேதனையைக் கண்டும் வேதனையான வாசகங்களைக் கேட்டும் உருகிப்போய் கதறினார்கள். அனைவரும் தம் அண்ணன் யுதிஷ்டிரனை வினவினர்;

அண்ணா! நம் கண்ணனுக்கு வந்த நிலையை பார்த்தீரா? உலகம் நிலை பெயரினும் தான் நிலை பெயராதவன் இன்று இப்படி கதிகலங்கிப் போனானே! நம் கண்ணனுக்கு இப்படி நிலை வரலாமா? நம் அனைவரையும் கண்ணை இமை காப்பது போல் இதுகாலபரியந்தம் காத்தருளினானே; இன்று எம்மைக் காப்பாற்றுங்கள் என கதறுகின்றானே! இது என்ன விநோதம்? உலக ரட்சகனுக்கே இந்நிலையென்றால் நம் நிலை என்ன? நம் கஷ்டங்களையெல்லாம் ஒவ்வொரு நொடியும் துடைத்த கண்ணனின் துயர் துடைக்க வேண்டாமா? இனி நம்மைக் காக்க யார் இருக்கிறார்கள்? போர்க்களத்தில் நம் பிதாமகர் பீஷ்மர் போட்ட ஆயிரக்கணக்கான பாணங்கள் இவன் உடலை சல்லடைகண்களாக துளைத்த போதும் கலங்காத அதிரத புன்முறுவலோடு இருந்த கண்ணன் இன்று அவன் வலது பாதத்தில் ஓர் பாணம்பட உதிரம் இப்படி கொட்டி மரணாவஸ்தைக்கு ஆளாகிவிட்டானே! நாம் அனைவரும் காணும் காட்சி உண்மையா அல்லது நம் மனப்பிரமையா? நீர் ஏன் இப்படி சிலையாட்டமா சிரித்துக் கொண்டே இருக்கிறீர்? உம் மனம் கல்லா இரும்பா அல்லது இதயமே இல்லையா? நம் கண்ணனின் மரணாவஸ்தையை நேரில்



உ

கண்ணரும் இப்படி மௌனம் சாதிக்கிறீர்! உம் முகத்தில் கவலை பயம் துயரம் இப்படி அறிகுறி ஒன்றையும் காணோமே. அந்த நேரத்திலும் உம்மால் எப்படி சிரிக்க முடிகிறது? நம் அத்தை மகனாயிற்றே, என்ற பாசம் கூட உமக்கு துளி கூடக் காணோமே. சரி பாசம் தான் வேண்டாம், "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்றபடி நமக்கு பல காலம் உபகாரியாயும் நம்முடனே இருந்து நம் நிழல் போல் வந்த தோழமையும் இருந்தவனை இப்படி எப்படி மறக்க உனக்கு மனம் வந்தது?

"உன் நிலையைக் (அன்று) காணும் போது உமக்கு "**தருமபுத்திரர்**" என்ற பெயரும் பொருந்தாதே!!!

## தர்மர் வாக்கியம்

ஓ எம் அருமையான, தற்காலிக தம்பிகளான குழந்தைகளே!

நம் கண்ணனா? நம் மைத்துனனா? நமக்கு பல காலம் உபகாரம் செய்தவனா? இப்போது அவஸ்தைபடுகிறானா? அப்படி ஒன்றும் எமக்கு விவகரிக்க தோற்றவில்லையே! நம் கண்ணன் (அறிவுக்கண்ணை உடையவன்) ஒன்று தான் நம் விபரத்திற்காக தோன்றுகிறது! அவன் வேறு, நீங்கள் வேறு, இந்த ஜகம் வேறு எனத் தோன்றவில்லையே!

"ஏதோ அந்த ஒன்றின் நாடகம் நடைபெறுகிறது!"

அது செயல்பட இயலாவிட்டாலும் சற்று இறங்கி வந்து அனேக கருவிகளாக (பொம்மைகளாக)

"ஆடிக்களிக்கிறது நீங்கள் கண்டு கழியுங்கள்"

கண்டு களிக்காதீர்கள்! கண்டு களித்தால் பாசம் உறவு உங்களை பிடிக்கும். கண்டு கழித்தால் அந்தந்த வினைபடியே அவை நீங்கிவிடும்! நீங்கள் அதுவாகவே இருப்பீர்.



உ

நீங்கள் கண்டும் கேட்டும் பேசியும் களிப்பதால் விநோதம் விபரீதம், விசித்திரம், அசம்பவம், சந்தேகம் அதனால் கலக்கம் பயம் தோன்றுகிறது இதற்கு மாறாக

நீங்கள் கண்டும், கேட்டும், பேசியும் அந்தந்த விருப்பையே கழித்துவிட்டீர்களானால் மேலே சொன்ன எந்த குணதோஷங்களும் உங்களுக்குத் தோன்றுவதேயில்லை. அவை அதிசயம்!
உங்கள் விநோத விபரீத பாவனையை நீங்களே பரீட்சிப்பீர்
இப்போது உங்கள் கண்ணனுக்கு உபகாரம் செய்ய வேண்டும் அவ்வளவு தானே? உங்களுக்கு எது முடியுமோ அதை செய்வீர் எனப்பணித்தான் தர்மதேவன்.

கண்ணா இதைப்பற்றிக்கொள் என தன் கதாயுதத்தை நீட்டினான் பீமன்.
கண்ணா இதைப்பற்றிக்கொள் என தன் காண்டீபத்தை நீட்டினான் அர்ச்சுனன்.
நகுலசகதேவர் கண்ணா இதைப்பற்றிக்கொள் என இருவரும் தம் வாள் உறையை நீட்டினார். திரௌபதி கண்ணா என் மனது இதைப்பற்றிக் கொள் என தன் சேலைத்தலைப்பை நீட்டினாள். தர்மதேவனைத்தவிர ஐவரும் கண்ணனுக்கு உபகாரம் செய்தார்கள்.

மாய கண்ணனும் ஐவரின் உபகரணங்களைப் பற்றிய நிலையில் ஐவரின் உடல்பலத்தையும் மனோபலத்தை (ஆசையை)யும் ஏற்றுக்கொண்டான்.
இதுவே எம் கண்ணனின் கடைசி உபகாரம் ஐவருக்கு!
"அவர்கள் ஐவரும் உணர்வற்ற ஜடமானார்கள்"!!!
அந்த ஐவரும் அவரவர் உடைமைகளை (ஆயுதங்களை)யே சுமக்க முடியாமல் அசக்தர்கள் ஆனார்கள்.
அவர்கள் கண்ணனின் முகத்தை அப்போது தான் கூர்ந்து நோக்கினார்களாம்!! கதறும் கண்ணனின் கண்களில் கண்ணீர் இல்லை. முகத்தில் கவலை துக்கம் துயரத்தின் சாயலான பயமே இல்லை. மரணபீதி, மரண அலறல், மரண சாயல், இவை அனைத்தும் மரணமாகி விட்டது!!



"எம்தய்யன் சுகமாக இருந்தான்"!

"அந்த ஐவரும் நலமாக இருந்தார்கள்"!!

"தர்மர் சாட்சாத்காரமாகவே" இருந்தார்!!!

## கர்மா, வைராக்யம், ஞான விளக்கம்

கர்மா:— கண்ணன் தாம் எடுத்ததோ மாயா தாவம் (அயோனி சம்பந்தன்) புண்ணியமும் பாபமும் இணைந்தால் தான் கர்மா தாவம் உண்டாகும் தனித்து புண்ணியமோ தனித்து பாபமோ இருந்தால் அங்கு கர்மா தாவம் உண்டாகாது. அதாவது புண்ணியம் ஜலம், பாபம் பிருதிவி (மண்) மாயா தாவம் என்றால் மனக்கண் கொண்டு அதன் இருப்பை அறியலாம் அதாவது நிழல் வடிவம். அசைவு அதாவது இயக்கம் தோன்றும். ஆனால் அது எவரையும் (தாவங்களை) பாதிப்பதில்லை. இங்கு மாயை வடிவில் மனம் (கற்பனை = எண்ணம்) புகுந்தால் பிற தாவங்களின் புண்ணிய பாபம் தோன்றும். அதை அழிக்கவோ ஆக்கவோ பிராய்தாதீனத்தால் எண்ணம் கொண்டால் அந்த புண்ணிய பாபம் இந்த மாயா தாவத்தையும் பாதிக்கும். அந்த எண்ணமே செயலானால் அந்த புண்ணிய பாப கர்மாவினால் இந்த மாயா தாவம் வலுவடையும். இந்த மாயா தாவம் பஞ்சிகர்தம் பண்ணப்படாமல் இருந்தாலும் பஞ்சீகர்த்தத்தை ஒத்த தோற்றம் உண்டாக வாய்ப்புண்டு

"ஆனால் பஞ்சீகர்தம் அல்ல"!!

இத்தோற்றம் தாவக்ரமத்தில் தாவக்கண்களுக்கும் தோன்ற வாய்ப்புண்டு. அந்த வாய்ப்புகளைக் கூடிய தாவம் அதிக புண்ணியம் செய்ததாயும் பாபம் மிகமிக குறைவாயும் உடையதாக இருந்தால் அந்த மாயா தாவத்தை காணவும் பேசவும் சிற்சில சமயங்களில் ஸ்பரிசிக்கும் வாய்ப்பு உண்டு. ஸ்பரிசம் என்பது சோப்பு நுரையை தொடும் மென்மை குளிர்ச்சியாக இருக்கும். சோப்பு நுரை அழியும் இது அழியாது. மேலும் மேலும் புண்ணிய பாப கர்மா சொல்லாலும், செயலாலும் அதிகமாகும் போது இம்மாயா தாவம் வலுப்பெறும். இங்கு நுங்கின் தன்மை போல் வலுவுடன் இருக்கும். இது மிருதுவானதை நிறம் தூய வெண்மை இங்கு இந்த மாயா தாவத்திற்கு ஆடை அணிகலன் தவசம் அணிய முடியும். இத்தாவத்தை அறுத்தால் வெண்மையான



திரவகம் போல் ஓர் சுரபி உண்டு குருதி அவஸ்யம் இராது ஆனால் இவர்கள் மாயை சம்பந்தம் (இவர்கள் மாயையை ஏற்றுக்கொள் இருக்கும் மாயை இவர்களை ஏற்பதில்லை) கொண்ட நல் அந்தவெண்மை திரவகத்தை நிறம்மாறச் செய்து குருதி போல் காட்ட முடியும்!

இப்போது கண்ணன் என்ற மாயாதாவம் தாம் அவதரித்து காலத்திலிருந்து தாவம் விரும்பியந்தம்

"துஷ்ட நிக்ரஹம்; இஷ்ட பரிபாலனம்"

செய்து வந்தமையால் கண்ணன் சம்ஹாரித்த அரசனோ அரக்கனோ அனைவரும் பாபமே செய்தவர்களன்று. தெரிந்தோ தெரியாமலோ புண்ணியமோ, தர்மமோ செய்திருக்க வேண்டும்! கண்ணன் அவதார காலத்தில் பல ஆயிரக்கணக்கானவர்களை அநியாயமாக அழித்திருக்கிறான்.

"பாபத்தை அழிக்கவே பரிஹாரமாக வந்த மாயாதாவம் புண்ணியத்தையும் சேர்த்தே அழித்துவிட்டது."

இரண்டுமே சேர்த்து அழிக்கப்பட்ட தன்மையினால் இந்த மாயா தாவம் மேலும் மேலும் வலுவடைந்துவிட்டது!

இங்கு ஞானிகளின் வாசகங்களை கவனிக்கவும்

"மண்ணைசபட்டேனே மண்ணுண்டுபோட்டதடா"

என்றும்

"பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்; தோன்றின மறையும் மறைந்தன தோன்றும். தோன்றின அனைத்தும் அனைத்தும் நின்று கொன்றன, நின்றன அனைத்தும் அனைத்தும் நினைத்து நின்றன, ஓம்பின அனைத்தும் அனைத்தும் நின்னை ஓம்பின!!" என்றும் பற்றுவரவு தீர்க்கப்படும் நிலையிலே உலகம் அமைந்திருக்கிறது.



உ

இங்குநம் கண்ணனின் மாயா தாலவும் பற்று வரவை நீர்க்க வந்ததே. அப்படியானால் கண்ணனின் மாயா தாலவும் பற்று வரவு நீர்க்கப்பட வேண்டியதே!

தோற்றும் சட்டத்திற்குட்பட்டதே!
தோற்றமற்றால் சட்டம் தேவை இல்லை!!
புண்ணிய பாவத்திற்குட்பட்ட கண்ணன்
தாலவம் இப்படி ஜீரணித்ததில் குற்றம் இல்லை!

இதன் உண்மையென்னவென்றால் ஸ்ரீ ராமனை அவதரித்து கர்மா, பக்தி, வைராக்யம் ஞானம் இவைகளை முறையாக ஏற்றுக் கொண்ட தன்மையினால் கண்ணனை அவதரித்த காலத்தில் அனைத்தையும் அனாயசமாகச் செய்து முடித்தான்.

ஸ்ரீ ராமனை வாழாமல் ஸ்ரீ கண்ணனை
நினைக்க முடியாது.

வைராக்யம் :- இங்கு கண்ணனின் சாமர்த்தியம் என்னவென்றால்

இங்கு கண்ணனிடம் மனம் உண்டு!

அது தாய்மையாகவே இருக்கும்!

எதிரில் உள்ள ஜீவனிடம் தாலம் புண்ணிய பாவ சம்பந்தம் கொண்டதால் அவன் மனம் மலினமாகவே இருக்கும் (எண்ணத்தால் அசுத்தமாயிருக்கும்) அதைதான் ஏற்றுக்கொண்டு தம் மனத்தை அங்கு வைத்து விடுவான் கண்ணன். இப்படி கண்ணனை அந்தரங்க சுத்தியுடன் தரிசிப்பவர்களிடம் தம் சுத்தமனதைக் கொடுத்து அவர்கள் மனதை வாங்கி இப்படி திரும்ப திரும்ப செய்வதால் எதிரில் உள்ள ஜீவன் மனம் பண்பட்டு விடும். இதில் கண்ணன் மிகு வைராக்யமாக இருப்பான் மேலும் பெண்கள் வகையிலும் சபலம் சலனம் உண்டாகாமல் வெகு ஜாக்ரதையாகவும் வைராக்யமாகவும்



உ

இருப்பான் மண் ஆசையோ பொன் பொருள் ஆசைகளோ
கண்ணனிடம் இடையாது. ராஜ்யத்திற்காக படையெடுத்தோம்
என்றோ பொன் பொருள் சேகரித்தோம் என்றோ கண்ணன் வர
லாற்றில் எதுவுமே இல்லவே இல்லை. பதினாயிரம் கோபியர்களை
மனைவியாக கொண்டான் என்றும் எட்டு பட்டமஹிஷிகளை உடை
யவன் என்றும் புராணம் (புகழ்) சொல்லும். அந்த பதினாயிரம்
கோபியர்களும் ஸ்ரீ ராம் ராமாவதார காலத்தில் தம்மால்
வணங்கப்பட்ட மஹரிஷிகளாகும். அவர்களே ஸ்ரீ க்ருஷ்ணாவதார
காலத்தில் கோபியர்களாக பிறந்து ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய
தத்துவத்தில் மெய்மறந்தவர்களேயன்றி மனைவிமார்கள் இல்ல
வே இல்லை. கண்ணன் தம்மாயாவதார காலத்தில் ஸத்யத்தை
யும் தர்மத்தையும் அப்படி தம்மை வருத்திக் காப்பாற்றிய
வனேயன்றி ஏதோ தானே என்று வந்து போகவில்லை. முள்ளை
முள்ளால் எடுப்பது போலவே வஞ்சகம், சூது, பொய்மையை
வஞ்சகம் சூது பொய்யால் அழித்தான். ஸ்ரீ க்ருஷ்ணாவதார
காலத்தில் ஸத்யத்தையும் தர்மத்தையும் காப்பதற்காக
அவன் வைராக்யமாக சாதித்ததை அவனே அறிவான்
மற்றைய எவராலும் அறிய முடியாது.

ஞானம் :- அனேக மஹான்களும் மஹரிஷிகளும்,
தபஸ்விகளும், ஸாதுக்களும், இல்லற ஞானிகளும்
அத்வைத ஞானத்தை அனுபவ நிலையில் உரைத்தது போன்று
எம் கண்ணனும் நடுரணகளத்தில் இருபடைகளும்
எதிரும் புதிருமாக ஆயுதம் ஏந்தி நிற்க தம்
ஆத்ம சக்தியால் அனைத்தையும்
ஸ்தம்பித்து பதுமைகளாக அசையாமல்
நிறுத்தி கீதை என்னும் அமுதத்தை
18 அத்யாயங்களாக்கி நண்பனுக்கு
போதித்து நாமம் கீதாச்சார்யன் என்ற
ஸத்குரு பட்டமும் பெற்றான்!!!



உ

இதில் ஆத்ம ஞான ரகஸ்யமே என்னவெனில் உலக கதைகளின்
படியும் தெய்வீக இணைப்பின்படியும்
ஸ்ரீ பாகவத தோத்தம பாகவதம் சொல்வதாவது:—
கண்ணன் பதினாயிரம் மனைவியிடமும் குழந்தைகள் நிறைய பெற்றான்
என்றும் அதாவது ஒவ்வொரு கோபியரிடமும் பத்து பத்து குழந்
தைகள் பெற்றான் என்றும் (உலக ஜீவர்கள் அனைத்தும் அவன்
குழந்தைகள் தானே) கண்ணன் பெரிய குடும்பி என்றும் பெரிய
சம்சாரி என்றும் உலக விவகாரத்திற்காக அதாவது சர்ச்சைக்கா
கவும் சொல்வதுண்டு. அவை உலகின் விகார விவகாரத்திற்கு
உண்டு. "உண்மையில் அல்லவே இல்லை"!
"கண்ணன் நைஷ்டிக பிரம்மச்சாரி"
சுத்தஞானி அவன் முகத்தில் எந்த விறைப்பும் கடுகடுப்போ
ஆவேசமோ, குரோதமோ மேலும் எந்த பாதகமான குணங்களோ
இல்லவே இல்லை. ஆனால் கதை எழுதுபவர்களும் சொல்பவர்
களும் மேலே சொன்ன விகார குணங்களை அங்காங்கே
சுட்டிக்காட்டுகிறார்கள் அதி மேதாவிகள்!
"அவன் முகத்தில் எந்த விறைப்பும் ஓர்
ஞானிக்குரிய புன்முறுவலும் சிலகாரிய
சித்த நிமித்தம் கடகட சிரிப்பும் உண்டு;
வேறு எந்த குணங்களும் அணுவளவும் கிடையாது!

**கண்ணன் = கண் அவன் = அறிவுக்கண்!!**

கண்ணனின் குலம் அழிந்து கெட்டுப் போனதின் காரணமே புண்ணிய பாவ
வினைகளே அவன் பரோபகார நிமித்தம் செய்தாலும் அந்த வினை அவன்
பாவத்தை பிடித்தே தீரும்.
"அவன் பரமாத்மா தான், பாவம் புண்ணிய பாவ வினைதானே"
கண்ணனின் வாசகம் என்ன வென்றால்?



உ

யாம் அயோனி சம்பன்னை யிருந்தாலும், தாவம் மாயா
சம்பந்தமாக இருந்தாலும், பஞ்சீகர்தம் எம் தாவம் பண்ணப்
படாமல் இருந்தாலும்

"புண்ணிய பாபம் தாவத்தை சம்பந்தம்
கொண்டதால் தாவத்தை நசித்துத்தான்
விட வேண்டும்!!

இது வேத நியதி. வேதங்களை சிருஷ்டித்த யாம் அதன் சட்ட
திட்டங்களுக்கு அடங்காமல் இருந்தால்

**யாம் வேத நாயகன் அல்ல!!!**

எம் மற்றைய ஆறு அவதாரங்கள் வந்து ஓர் காரியத்தை
மட்டும் முடிக்கும் அதன் தோற்றம் இருப்பு மறைவு
அந்த நேரத்தோடு முடிந்துவிடும்

ஆனால் மற்றைய இரண்டு அவதாரமும் (ஸ்ரீ ராமன், ஸ்ரீ கண்ணன்)
அப்படியல்ல, உலக மக்கள் எப்படி வாழ வேண்டும் என்று அதில்
வாழ்ந்து காட்டினோம். ஆகவே தான் மற்றும் அனைத்தும் (18 புராணம்)
பொய்கதைகள் (புளுகு) என்றும் இந்த இரண்டை மட்டும் இதிகாசங்கள்
என்றும் ஆன்றோர் வைத்தனர்.

இதிகாசம் என்றால் "இப்படி நட" எனப்பொருள்
படும். ஸ்ரீ ராமன் என்றால் 1. ஸத்யம் காத்தல்;
2. தர்மத்தை ஸ்தாபித்தல் 3. ஒருவனுக்கு ஒரு தாரம்
(அவனே அவதாரம்) இது ஒரு அவதாரத்தின் நோக்கம்
ஸ்ரீ கண்ணன் என்றால் மேலே சொன்ன மூன்றில் நிலையில்
ஓர் ஜீவன் அணுபிசகாமல் நடந்தால்

"நீங்களே கண்ணன் ஆகலாம்."

ஸ்ரீ ராமனாக வாழாமல் கண்ணனாக ஆகமுடியாது"

"ஸ்ரீ ராமன் பக்தி, வைராக்யம்! கண்ணன் ஞானம்!!



உ

ஒரு சொல்!

1. ஸத்யம் காத்தல்:— ஸத்யம் காத்தல் என்றால் ஸத்யம் பேசு எனப்பொருள்படும். ரிபுகீதையில் பாடும் போது ஓர் பாடலில்

வாக்கும் பொய். மனதும் பொய்;
மறைமயமாய் காண்கின்ற தனைத்தும் பொய்யே!! என கூறப்படுகிறது.

குழந்தைகளே! லௌகிகத்தில் மலினவாக்கு என்றும், தெய்வீகத்தில் வேதவாக்கென்றும் இருநிலையில் வாக்கு பொருள்படும்! பரமார்த்திகத்தில் வாக்கு இல்லை அங்கு மௌனமாகும்.

லௌகிகமலின வாக்கு:— உலகபேச்சு, குடும்ப பேச்சு, உறவுப் பேச்சு, வெண்களைப் பேச்சு, ஆண்களைப் பேச்சு, அரசியல், சினிமா, தொழில், பற்றுவரவு மற்றும் குணதோஷசம்பந்தப் பேச்சு ஆக நாம ரூப குணசம்பந்தமாக பேசுதல்

"இவைகளை அடியோடு ஒழிக்க வேண்டும்" இது பொய்யே.

தெய்வீக வேதவாக்கு:— மேலே கூறிய அனைத்து வார்த்தைகளிலும் "தெய்வநாமாவை இணைத்தே பேசுதல்"

இப்படி தெய்வநாமா இணைக்கப்படுவதால் லௌகிக குணதோஷம் அவஸ்யம் அகலும். மேலும் அந்தவார்த்தைகளும் இயல்பாகவே குறைந்து குறைந்து நின்றுவிடும்! புராணங்களில் காண ஒழுக்க சம்பந்த கதைகளை பேசலாம் படிக்கலாம் விஷய வாசனை சம்பந்த பேச்சோ கதையோ கூடவே கூடாது.

"ஒழுக்கத்தை உயர்வாக கொண்டு" அது சம்பந்த வார்த்தை பேசலாம். ஒவ்வொரு வார்த்தையிலும் இறைசம்பந்தம் கலந்திருக்க வேண்டும்! இவைகளையும் அளவோடு பேசி பேச்சை குறைக்க முயற்சித்து அப்பேச்சையும் விட்டொழிக்க வேண்டும்!

இதன் முடிவு!

நாமரூப குணதோஷ சம்பந்தவாக்கு வேண்டாம்!
சர்வார்ப்பண நிலையில் தெய்வீகவாக்கு வேண்டும்!!

ஆரம்பத்தில் கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும். பின் அனுபவத்தில் நம் வாக்கு குறைந்து குறைந்து குறைந்து தானே அந்த ஒன்றில் நிலைத்து நின்றுவிடும்!



உ

ஒரு வில்!

2. தர்மத்தை ஸ்தாபித்தல்:— தர்மத்தை ஸ்தாபிப்பது என்றல் தர்மம் செய் எனப் பொருள் படும். தர்மம் செய் என்றல் அன்னதானம், சொர்ண தானம், கோ தானம், பூ தானம் என பொருள்களை கொடுக்கும் தானம் தர்மமல்ல அது புண்ணியம்.

இந்த புண்ணியம் செய்தால் ~~தான்~~ ஆனல் அது தர்மத்துக்கு வழிவகுக்கும். மேலும் கொடுக்காதிருப்பது சிறு பாவம்! பிறர் கொடுப்பதைத் தடுப்பது பெரும் பாவம் என்றும், ஐயமிட்டு உண் என்றும், கொடுத்துப்பழகு. எடுத்துப் பழகாதே என்றும்; முன்கை நீண்டால் தான் முழங்கை நீளும் என்றும், கர்ணன் அன்னதானம் பண்ணமல் ஓர் அந்தணனுக்கு அன்னசத்திரத்தை சுட்டிக்காட்டிய விரலால் தாக சாந்தி செய்து கொண்டான் என்றும்; அவன் செய்த தான தர்மம் அவனே கடைசியில் அவனை காத்தது என்றும் தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும், கூட இருந்தே குழி பறித்தாலும் கொடுத்தது காத்து நிற்கும் என்றும் இந்த புண்ணியத்தை நிறைய அடுக்கிக் கொண்டே போகலாம் மேலும் இந்த புண்ணியம் என்று சொல்வதைவிட

தர்மத்தின் அஸ்திவாரம் அதாவது முதல்படி என்றும் சொல்லலாம் இப்படி செய்யும் காரியம்

விளம்பரம், வியாபாரம், படாடோபம்

இல்லாமல் செய்தால் அது தர்மமாகும்.

பலன் கருதி செய்வதோ அல்லது ஏதாவது ஸங்கல்பத்தை வைத்து செய்வதோ தர்மமாகாது அது புண்ணியமாகும். ஒருவதை கொடுப்பதை மறுகை அறியாமல் செய்வது தர்மமாகும்.

பிறவிப்பிணியை நீக்கும் தர்மமாவது:—எந்த ஒரு சொல்லுக்கும் ஓர் செயலுக்கும் ஸ்ரீ பகவந் நாமஸ்மரணையோடு செய்தால் அந்த சொல்லினலும் செயலினலும் விளையும் புண்ணிய பாப கர்மாக்களை ஸ்ரீ பகவான் பார்த்துக்கொள்வான் அதாவது அந்தந்த வினைகளை அவன் பார்த்துக் கொள்வான்! அதனல் பிறப்பிறப் பென்னும் வித்து அழிந்து விடும். அதாவது?

கைகளினல் கொடுக்கும் தர்மத்தைவிட வாக்கினல் ஸத்ய போதனை தர்மமே சிறந்தது!



## ௨

## ஒரு இல்!

௩ ஒருவனுக்கு ஒரு தாரம் :— ஓர் சாதனையாளனுக்கு மண், பொன், பெண் என்ற மூன்று ஆசைகளையும் ஒழிக்க வேண்டுமெனச் சொன்னாலும் காம, காஞ்சனம் அதாவது பெண்ணாசை பொன்னாசையென இந்த இரண்டைத்தான் வலியுறுத்தி சொல்வார்கள் அதிலும் பொன் ஆசையையாவது மண்ணுக்கு அடித்து தள்ளிவிடலாம். இந்த பெண் ஆசை மிகவும் கொடியதாகும் இது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தும்.

"இது ஆடவர் பெண்டிர் விஷய (விஷம்) ஆசை"

யென சொல்லி இதைத் தவிர்த்தால் மற்றும் இரண்டும் சாந்தி சமாதான மாகி விடும் என சொல்வார்கள்! புராணங்களிலோ இதிகாசங்களிலோ மற்றும் அனைத்து கதைகளிலும்

"பெண்களை விரும்பி அழியும் ஆண் இனத்தைத் தான் வலியுறுத்தி சுட்டிக்காட்டப்படுகிறது!!!

ஒருவனுக்கு ஒரு தாரம் என்பதை ஸ்ரீ ராமனைத்தான் சுட்டிக் காட்ட முடியுமேயன்றி வேறு எவரையும் மெய்ப்பித்துக் காட்ட முடியவில்லை. மேலும் சாஸ்திரம் ஓர் உண்மையை உரைக்கும் போது

"ஆண்களை விட பெண்களுக்கே 9 பங்கு காமம் அதிகம்"!!

எனவும் குறிப்பிடுகிறது. ஆனாலும் ஆண்கள் தான் அதிகமாக காமத்தில் விழுந்து அழிந்து போகிறார்கள்.

உன் மனைவியை மட்டும் நீ நேசி!

உனக்கு அழிவு வருமாயின் நீ யோசி!!

ஆசையென்பது ஓர் தாம்பு கயிறு போன்றது. அதன் இரு நுனிகளும் எழுச்சி ஆறவே தான் முடிச்சு விழுமேயன்றி ஒன்று மட்டும் எழுந்தால் முடிச்சு விழாது! மேல் தோலின் மினுமினுப்பை மட்டும் கவனித்து படும் என விழும் விட்டில் பூச்சியென விழுந்து மாய்ந்தால் இதற்கு எவர் பொறுப்பேற்க முடியும்? இதைத்தான் எம் சிவவாக்யர் சொன்னார்!

பரச்சியாவது ஏதடா? பணத்தியாவது ஏதடா?
பரச்சி போகம் வேறதோ? பணத்தி போகம் வேறதோ?
பரச்சி தோல் எலும் பிலும் இலக்கம் இட்டு இருக்குதோ?
பரச்சியும் பணத்தியும் "பகுத்துப் பாரும் உம்முளே"!!!
எனச் சொன்னார்.



# தாயின் மறு அவதாரமே தாரம் தான்
# பெண் என்றால் தாய்க்குப் பின் தாரமே!!!
# மற்ற பார்வையெல்லாம் மரணமே!

சிப்பியின் வெள்ளியின் மயக்கமென சென்றால் விழிக்கிற இழப்பாய்!
கட்டையில் பெண் எனப் போனால் பாடையில் போவாய்!
மரத்தில் (மாது) யானையெனப் போனால் மதம்பிடித்து அழிவாய்!
ரட்சுவில் (ஆரணங்கு) அரவுயெனப் போனால் (காமம்) விஷம்ஏறி சாவாய்!
கானலில் (அழகுபெண்) ஜலம் எனப் போனால் நாவறண்டு அழிவாய்!

"ஒன்றைப் பற்றி ஒரகத்திரு" எனபக்தியிலும் ஞானத்திலும் அதன் "வைராக்யத்திலும்" சொல்வதைப் போல் இல்லறத்திலும் உறுதியாக இருந்த இந்த தர்மத்தினைல் ஒழுக்கத்தில் ஆழ்ந்த பக்தியும் திட வைராக்யமும் பெற்று ஸ்ரீராமனாக வாழ்ந்து காட்டினால் "அனுபவத்தில் எம் கண்ணனை ஆகமுடியும்!!

பரம்பொருளின் அவதாரங்கள் கோடானுகோடி இருந்தாலும் "ஸ்ரீ ராம, கிருஷ்ணனின்" அவதாரங்களே மனிதவாழ்க்கை நெறிமுறைகளை அடிப்படையாக கொண்டதாகும். மற்றும் அனைத்தும் வாழ்ந்து காட்டியதில்லை. அப்போதைக்கப்போது தோன்றி உண்மைகளை உணர்த்தியதாகும்.

ஓர் தாயை (அம்மாவை) பற்றி சொல்வதென்றால்
ஓர் அன்னைக்கு ஓர் மகன் இருந்தான். அந்த பையன் மீது அளவற்ற பாசம் வைத்திருந்தாள் அவன் செல்வப்பையனாக இருந்ததால் சேர்க்கையின் தோஷத்தால் கெட்டுப் போனான். தாசிவீட்டுக்கே கதியென இருக்கலானான். அவன் தாயும் எவ்வாறோ கெஞ்சி கொஞ்சி சொல்லிப்பார்த்தாள் மகன் திருந்தவில்லை. இவன் தாய் இருப்பது அந்த தாசிக்குப்பிடிக்கவில்லை. அந்த தாசிக்காக எதையும் செய்வான் அந்த மூடப்பையன். ஒருநாள் அந்த தாசி அவனைப்பார்த்து உன் தாய் இதயத்தை அறுத்து எடுத்துக்கொண்டு வா என்றாள். அவனும் அவ்விதமே செய்தான் முதலில் கத்தி கொண்டு தாயின் மார்பை பிளந்தான் பின் வேகமெதுவாக தன் தாயின் இதயத்தை அறுத்து எடுத்தான். அதைதன் கைகளில் ஏந்திய வண்ணம் வீட்டை கடந்து தாசிவீட்டிற்கு செல்ல முற்பட்டான். அது சமயம் வாசல்படி தட்டி கீழேவிழப் போனான்.



உ

இருந்தாலும் தருமாறி சமாளித்து நின்று கொண்டான்.
அந்நிலையிலும் அந்த தாயின் இதயம்
சொன்ன வாசகம்:- "மகனே பார்த்துப் பேர்
இப்பேர்ந்தால் உனக்கு அடிபட்டு விடும்" என பரிவுடனும் பாசத்துடனும் சொன்ன
தாம். எந்த நிலையிலும் ஓர் உண்மைத்தாயுள்ளம் தம் குழந்தையை குற்றம் குறைவாக
காணாது நிறைவாகத்தான் காணும்.
இந்நிலையில் அன்பிலும் பண்பிலும் உன் தாயை உணர்வாயாக.
அதைப் போல் தக்க சமயத்தில் அறிவுரை கூறியும் ஓர் குழந்தையைப் போல்
பாசத்துடன் அரவணைக்கும் தாரத்திற்கும் உயர்விடம் கொடுத்து போற்றி
அதரிப்பாயாக. ஆகவே?
உன் அன்பின் பிறப்பிடம் தாயாகவும்.
உன் அறிவின் சிறப்பிடம் தாரமாகவும்!!
இந்த இரண்டை தவிர வேறு பெண்களை "தவறான கண்ணோட்டத்துடன்
நோக்காதே! இதுவே ஸ்ரீ ராமன் வாழ்ந்து காட்டினான்.

குழந்தைகளே! ஸ்ரீ கண்ணன் வரலாற்றிலே நாம் முடிவாக தெரிந்து
கொள்வது யாதெனில்?
வினைப் போகமே ஓர் தேகம் கண்டாய்! வினைதான்
ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது கண்டாய்!!
என்ற நிலையில் எம் பிரபு கண்ணன் கடைசியில் தாவத்தை நசித்து
விட்டதில் ஆச்சர்யம் இல்லை. கண்ணன் தம் மாயை தாவத்தை விடும்
முன்னர் பல் குணனுக்கு இதாவுபதேசம் செய்தது போன்று உத்தமோ
த்தமரான உத்தவ சித்தருக்கு தத்துவ ஞானோபதேசம் 18 நாட்கள்
துவாரகையை விட்டு வெளியே வந்து ஓர் மரத்தடியில் அமர்ந்து
போதித்தான் பின்னர் உத்தவரிடம் "தம் அம்ச விக்ரஹம்"
ஒன்றை தம் கரத்தாலேயே கொடுத்து
உத்தவா! நீ இந்த விக்ரஹத்துடன் பத்ரி செல்வாயாக. அங்கு
நீ விதேஹமுக்தி அடையும் பரியந்தம் இதை உன் வசம் வைத்தி
ருந்து பின் இவ்வுலகில் சமத்வம் நிறைந்த பூமியில் இதை
பிரதிஷ்டை செய்துவிடுவாயாக என ஆணையிட்டு பின்னும்



உ

சொல்வான் எம் கண்ணன் ஹே! உத்தவா இன்றிலிருந்து ஏழாம் நாள் நவத்வாரம் கொண்ட இந்த துவாரகை சமுத்திரத்தில் மூழ்கி அழியப்போகிறது. பிராமண சாபத்தால் யாதவ குலமே முழுவதும் அழிந்துவிட்டது மிஞ்சியது இந்த தேகம் ஒன்று தான் இதையும் அது சமயம் யாம் இந்த "துளஸி தாம்" என்ற இடத்தில் முன் ஜன்மாவில் வாலியாக இருந்து இந்த ஜன்மாவில் இந்த தேகம் மறைவிற்காகவே காத்திருக்கும் ஓர் வேடுவன் கையால் தான்

"கழித்து விட்டு விடப் போகிறேன்!!"

எனச் சொல்லி உத்தவரை அனுப்பி வைத்தான் எம் இறைவன். உத்தவரும் பத்ரி சென்றார். சிலகாலம் அங்கிருந்து விட்டு தாம் சமாதி அடையும் காலையில் வியாழனாகிய குருபகவானையும் வாயு தேவனையும் அழைத்தார். அவர்களும் வந்தார்கள். அவர்களிடம் தாம் கண்ணனிடம் பெற்ற விக்ரஹத்தை கொடுத்து இதை இப்பூமண்டலத்தில் எங்கு சமத்வம் நிலவுகிறதோ அங்கு இதை பிரதிஷ்டை செய்க எனப் பணித்தார் உத்தவர். அந்த கண்ணன் விக்ரஹத்தை ஏந்திய வண்ணம் ககனமார்க்கமாக குருபெருமானும் வாயுபகவானும் இடம் தேடி வருகையில் கேரள பூமியில் ஓர் இடத்தில்

"ஓர் நிறை கர்ப்பிணி தவளை ஒன்றுக்கு,
ஓர் சர்ப்பம் வெயில் தாக்காமல் தம் சிரசால்
குடைபிடித்துக் கொண்டிருந்ததாம்!!"

இதுவே சமத்வ பூமி என உறுதி செய்து அங்கு எம் கண்ணன் விக்ரகத்தை குருவும், வாயுவும் இணைந்து பிரதிஷ்டை செய்தார்களாம். ஆகவே அந்த இடம் "குருவாயூர்" என ஆனதாம்.

கண்ணன் சொல்லியபடி ஏழாம் நாள் துவாரகையை சமுத்திரம் சூழ ஆரம்பித்தது. கண்ணன் தேகம் மறைந்ததை அறிந்த கண்ணன் மீது பொறாமை கொண்ட ஏனைய அரசர்கள் படையெடுத்து வந்து துவாரகையை முற்றுகை இட்டனர். அனைவர்க்கும் என்ன ஆசையென்றால் கண்ணன் பதினாயிரம் பெண்களை வைத்திருந்தான். அவர்களுக்கு இனி ஆதரவு எவரும் இல்லை. நாம் அனைவரும் படையெடுத்து சென்றால் அந்தப் பெண்கள் அனைவரையும் கவர்ந்து சென்று விடலாம்.



உ

என "ராம எண்ணத்துடன்" வந்து சூழ்ந்து கொண்டனர். கோட்டையின் வாசல்கள் அனைத்தையும் அடைத்துக் கொண்டனர் ஒவ்வொரு பெண்களாக வெளியே வாருங்கள் என ஆணையிட்டனர்.

ஆனால் பெண்கள் வரவில்லை, மகரிஷிகளையும், தபஸ்விகளையும் முனிவர்களையும் ஒவ்வொருவராக வெளியே வந்து கொண்டிருந்தனர். வெளியே நின்ற காமாந்தகாரர்களும் அழகிய பெண்களை காணாமல் தாடி ஜடாமுடியோடு வரும் மகான்களை சீ போ! சீ போ!! சீ போ என வெளியே அனுப்பிக் கொண்டே இருந்தார்கள் கோட்டையும் முழுவதும் காலியாகி விட்டது ஒரு பெண்ணையும் காணோம்!

இதன் ரகஸ்யம்

முன்பு யாம் சொல்லிய படி ஸ்ரீ ராமாவதார காலத்தில் வனத்தில் ஸ்ரீ ராமனை வணங்கப்பட்ட ஸ்ரீ மகான்கள் ஸ்ரீ கிருஷ்ணாவதார காலத்தில் கோபிகா கோபாலர்களாக அவதரித்திருந்தார்கள்.

அவர்களோ தாம் வந்த காரியம் முடிந்த தன்மையினால் பழைய தன் சொரூபங்களை வகித்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

கோட்டை வெறும் கோட்டையானதை அதன் பின் தான் உணர்ந்தார்கள் "அக்காமுகிகள்."

கண்ணனின் அவதாரமும் பூர்த்தியானது.

எம் எழுதுகோலும் பூர்த்தியானதாக தெரிகிறது

சுபம்! சுபம்!! சுபம்!!! சுபம்!!!!

சம்பூரணம் சமாப்தி!


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!